# தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 - 2024

### மானியக் கோரிக்கை எண். 31

**த. மனோ தங்கராஜ்**
தகவல் தொழில்நுட்பவியல் மற்றும்
டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

# தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

## மானியக் கோரிக்கை எண்.31

## கொள்கை விளக்கக் குறிப்பு 2023 – 2024

## பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| I | முன்னுரை | 1–11 |
| II | **தமிழ்நாடு மின்னணு நிறுவனம்** | **12–66** |
| 1. | முன்னுரை | 12–13 |
| 2. | தகவல் தொழில்நுட்ப ஊக்குவிப்பு மற்றும் வளர்ச்சி | 13–41 |
| 2.1 | எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZ) | 17–40 |
| 2.1.1 | எல்கோசெஸ் (ELCOSEZ) சோழிங்கநல்லூர், சென்னை | 17–20 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 2.1.2 | எல்கோசெஸ் (ELCOSEZ) – விளாங்குறிச்சி, கோயம்புத்தூர் | 20–22 |
| 2.1.3 | எல்கோசெஸ் (ELCOSEZ) – இலந்தைக்குளம், மதுரை | 22–25 |
| 2.1.4 | எல்கோசெஸ் (ELCOSEZ) – வடபழஞ்சி, மதுரை | 25–29 |
| 2.1.5 | எல்கோசெஸ் (ELCOSEZ) – நவல்பட்டு, திருச்சிராப்பள்ளி | 29–32 |
| 2.1.6 | எல்கோசெஸ் (ELCOSEZ) –கங்கைகொண்டான், திருநெல்வேலி | 33–35 |
| 2.1.7 | எல்கோசெஸ் (ELCOSEZ) ஜாகீர்அம்மாபாளையம், சேலம் | 35–38 |
| 2.1.8 | எல்கோசெஸ் (ELCOSEZ)– விஸ்வநாதபுரம், ஓசூர் | 38–40 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 2.2 | பல்துறை சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (Multi Sector Special Economic Zones) | 40–41 |
| 3. | தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு | 41–57 |
| 3.1 | வலையமைப்பு சேவைகள் | 41–44 |
| 3.1.1 | தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) | 41–43 |
| 3.1.2 | தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட விரிவாக்கம் | 43–44 |
| 3.2 | பிற இணைப்பு சேவைகள் | 44–45 |
| 3.3 | தமிழ்நாடு மாநில தரவு மையம் | 45–46 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 3.3.1 | தமிழ்நாடு மாநில தரவு மையம் –I (TNSDC –I) | 45–46 |
| 3.3.2 | தமிழ்நாடு மாநில தரவு மையம்–II (TNSDC II) | 46 |
| 3.4 | தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (TNDRC) | 47–48 |
| 3.5 | தமிழ் மேகம் – தமிழ்நாடு மேகக் கணினிய சேவைகள் | 48–49 |
| 3.6 | மின்னணுப் பாதுகாப்பு (e–Security) | 49–50 |
| 3.7 | தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பு (CSA–TN) | 50–57 |
| 4. | மின் ஆளுமை | 57–61 |
| 4.1 | ஆதார் நிரந்தரப் பதிவு மையங்கள் (PECs) | 57–59 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 4.2 | சமக்ரஷிக்க்ஷா–வின் கீழ்க் கல்வித் தொகுதிகளில் ஆதார் சேவை மையங்கள் நிறுவப்பட்ட விவரங்கள் | 60–61 |
| 5. | கொள்முதல் பிரிவு | 61–66 |
| **III.** | **மின்–ஆளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA)** | **67–138** |
| 1. | முன்னுரை | 67–68 |
| 2. | நிருவாக அமைப்பு | 68–70 |
| 2.1 | மின்ஆளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை | 68–69 |
| 2.2 | மாவட்ட மின் ஆளுமை சங்கங்கள் | 69–70 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 3. | டிஜிட்டல் தமிழ்நாடு (DiTN) | 70–77 |
| 3.1 | பொதுமக்களுக்கான அரசு சேவைகள் | 71–77 |
| 4. | டிஜிட்டல் மயமாக்கப்பட்ட அலுவலகம் – தமிழ்நாடு–மின் அலுவலகம் | 77–80 |
| 5. | தமிழக அரசின் கொள்கை முடிவுகளுக்கான ஆதரவு அமைப்பு – (TN Decision Support System – (DeTN)) | 81–88 |
| 5.1 | தரவுத் தூய்மை | 81–83 |
| 5.2 | முதலமைச்சரின் தகவல் பலகை | 83–88 |
| 6. | தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் முக்கிய திட்டங்கள் | 88–102 |
| 6.1 | மாநில குடும்ப தரவுதளம் (SFDB) | 88–89 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 6.2 | தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS) | 89–95 |
| 6.3 | உங்கள் அரசை அறிந்து கொள்ளுங்கள் இணையதளம் | 95–97 |
| 6.4 | செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் | 97–101 |
| 6.5 | தமிழ்நாடு நம்பிக்கை இணையக் கட்டமைப்பு – நம்பிக்கை இணையம் | 101–102 |
| 7. | தமிழ்நாடு அரசுத் துறைகளுக்கான திட்டங்கள் | 102–117 |
| 7.1 | மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம் – புதுமைப்பெண் திட்டம் | 105–110 |
| 7.2 | தமிழ்நாடு சட்டமன்றப் பதிவுகளை | 110–112 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| | மின்னணுமயமாக்கல் மற்றும் மேலாண்மை செய்தல் (D.M.E.R.L) | |
| 7.3 | முதலமைச்சரின் காலை உணவு திட்ட கைபேசி செயலி | 112–113 |
| 7.4 | நம்ம கிராம சபைக்கான அறிக்கையிடல் செயலி | 114–115 |
| 7.5 | மற்ற துறைகளுக்கான முக்கிய திட்டங்கள் | 115–117 |
| 8. | மற்ற துறைகளுக்கு வழுங்கப்படும் தகவல் தொழில்நுட்ப சேவைகள் | 117–128 |
| 8.1 | ஆதார் ஒரு சேவையாக | 117–120 |
| 8.2 | மின்னஞ்சல் ஒரு சேவையாக | 120–121 |
| 8.3 | குறுஞ்செய்தி ஒரு சேவையாக | 121–122 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 8.4 | மின் கையொப்ப சேவை (e–Sign as a Service) | 122–124 |
| 8.5 | கணினி அடிப்படையிலான தேர்வுகள் சேவை | 124–126 |
| 8.6 | தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புத் தணிக்கை | 126–128 |
| 9. | கொள்கைகள் மற்றும் தரநிர்ணயங்கள் | 128–131 |
| 9.1 | குறிப்பு தரநிலைகள் | 128–129 |
| 9.2 | தமிழ்நாடு தரவுக் கொள்கை | 129–131 |
| 10. | இந்திய அரசு இணைய தளங்களுக்கான தரநிர்ணயம் | 131–133 |
| 11. | சாதனைகள் மற்றும் விருதுகள் | 133–134 |
| 12. | தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub) | 134–135 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 13. | நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG) | 135–138 |
| **IV** | **தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV)** | **139–146** |
| 1. | முன்னுரை | 139 |
| 2. | தொலை நோக்குப் பார்வை | 140 |
| 3. | குறிக்கோள் | 140–141 |
| 4. | டிஜிட்டல் கேபிள் டிவி சேவை | 141–143 |
| 5. | அரசு இ–சேவை மையங்கள் | 143–144 |
| 6. | நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் (PECs) | 145 |
| 7. | தமிழ்நாடு இணையம் மற்றும் இணைப்பு சேவை நிறுவனம் மூலம் | 146 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| | இல்லங்களுக்கு இணைய சேவை (TANICS) | |
| **V** | **தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)** | **147–155** |
| 1. | பாரத்நெட் | 148–151 |
| 2. | இறுதிக் கட்ட இணைய இணைப்பு | 151–152 |
| 3. | ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பு | 152–153 |
| 4. | ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பின் (UDI) நன்மைகள் | 154–155 |
| **VI** | **தமிழ் இணையக் கல்விக்கழகம் (த.இ.க.)** | **156–173** |
| 1. | அறிமுகம் | 156 |
| 2. | நோக்கங்கள் | 157 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 3. | கல்வித் திட்டங்கள் | 157–160 |
| 3.1 | மழலைக் கல்வி | 158 |
| 3.2 | சான்றிதழ் கல்வி | 158 |
| 3.3 | மேற்சான்றிதழ் கல்வி | 159 |
| 3.4 | இளநிலைப் பட்டக் கல்வி (தமிழியல்) | 159–160 |
| 4. | இதர திட்டங்கள் | 160–164 |
| 4.1 | தீராக் காதல் திருக்குறள் | 160–162 |
| 4.2 | தமிழ்ப் பரப்புரைக்கழகம் | 162–164 |
| 4.3 | உயர்கல்வி | 164 |
| 5. | மின்–நூலகம் | 165–168 |
| 5.1 | தமிழிணையம் – மின் நூலகம் | 165 |
| 5.2 | உள்ளடக்கத் தமிழ் மின் நூலகம் | 166 |
| 5.3 | அரிய ஒளி–ஒலி, | 166–167 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| | ஒளிப்படங்கள் மற்றும் பிற வரலாற்று ஆவணங்கள் மின்னுருவாக்கம் | |
| 5.4 | தமிழர் தகவலாற்றுப்படை | 167 |
| 5.5 | மெய்நிகர் அருங்காட்சியகம் உருவாக்குதல் | 168 |
| 6. | இதர திட்டங்கள் | 168–170 |
| 6.1 | கப்பலோட்டிய தமிழன்– 150–ஆவது பிறந்த நாள் விழா – நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளை இணையத்தில் வெளியிடல் | 168–169 |
| 6.2 | அனைத்துப் பல்கலைக்கழகங்களின் முனைவர் பட்ட ஆய்வுச்சுருக்கம், ஆய்வுத் தொகுப்புகள் மற்றும் | 169–170 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| | கலைச்சொற்களின் பட்டியலை ஆவணப்படுத்தல் | |
| 7. | ஆய்வு மற்றும் உருவாக்கம் – கணினித் தமிழ்ப் பிரிவு | 170–173 |
| 7.1 | கணினி மொழியியல் | 170 |
| 7.2 | Use case மற்றும் கணினிக் கருவிகள் உருவாக்கம் | 170–171 |
| 7.3 | கணித்தமிழ்ப் பேரவை (KTP) | 171 |
| 7.4 | கணினித் தமிழ்க் கருவிகள் உருவாக்கம் | 172 |
| 7.5 | கணினித் தமிழில் நிரலாக்கப் போட்டி | 173 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| **VII** | **தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT)** | **174–195** |
| 1. | முன்னுரை | 174–175 |
| 2. | செயல்பாடுகள் | 175–195 |
| 2.1 | ஆசிரியர் திறன் மேம்பாடு | 175 |
| 2.2 | திறன் மேம்பாடு | 176 |
| 2.3 | தொழில் முனைவோர் மேம்பாடு | 176 |
| 2.4 | இளைஞர் திறன் மேம்பாடு | 176–178 |
| 2.5 | ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் | 178–179 |
| 2.6 | டிஜிட்டல் திறன் மேம்பாடு | 179–180 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
| --- | --- | --- |
| 2.7 | தொழில் நிறுவனத் தொடர்பு | 180–181 |
| 2.8 | செயல்படுத்தப்பட்ட புதிய அரசுத் திட்டங்கள் (2022–2023) நான் முதல்வன் – ஒரு அனுபவத் திட்ட அடிப்படையிலான கற்றல் | 181–184 |
| 2.9 | உள்ளடக்கத்திற்காக பெருநிறுவனங்களுடன் புதிய கூட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (2022–23) | 185 |
| 2.10 | வேலை வாய்ப்புக்காக பெருநிறுவனங்களுடன் புதிய கூட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (2022–23) | 185–186 |
| 2.11 | புதிய அரசு ஒப்பந்தங்கள் | 187 |

| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 2.12 | 2022–2023–ஆண்டில் செயல்படுத்தப்படும் சமூகப் பொறுப்புணர்வுத் (CSR) திட்டங்கள் | 187–192 |
| 2.13 | 2023 – 2024 ஆண்டிற்கான முன்மொழியப்பட்ட திட்டங்கள் | 192–195 |

## அத்தியாயம்–I

## முன்னுரை

**அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தற் கியல்பு.**

**(குறள் 382)**

**அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை இந்த நான்கு பண்புகளும் குறைவு படாமல் இருத்தலே தலைவனுடைய இயல்பாகும்.**

தமிழ்நாடு இந்தியாவின் மிகவும் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகவும் பொருளாதார மற்றும் சமூகக் குறியீடுகளின்படி நாட்டின் முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. அனைத்து துறைகளிலும் தமிழகம் வேகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. குறிப்பாகத் தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி அபரிமிதமானது. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் மனிதவளம் தமிழகத்திற்கு நாட்டின் அறிவுசார் சக்தி மையம்

(Intellectural Power House) என்ற பெயரினைப் பெற்றுத் தந்துள்ளது.

கோவிட் 19 நெருக்கடி மற்றும் செயல்முடக்கத்தினால் (Lock down) ஏற்பட்ட தாக்கம் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு சாதகமாக அமைந்துள்ளது. சமூக ஊடகங்கள், காணொலி கருத்தரங்க பயன்பாடுகள் மற்றும் மேகக் கணிநிய சேவைகளின் பயன்பாடு விரைவான வளர்ச்சியைக் கண்டது. ஏனெனில் மக்களும், வணிக நிறுவனங்களும் டிஜிட்டல் கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களை அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கியதால் இணையம் மற்றும் அதிவேக அலைக்கற்றை பயன்பாட்டிற்கான தேவை வியத்தகு முறையில் விரிவடைந்தது. இதனால் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் வழக்கமான முறைகளை விடுத்து வீட்டிலிருந்து வேலை செய்யும் கலாச்சாரத்தைத் கொண்டு வருவதற்கான தேவை

ஏற்பட்டு ஏராளமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

எட்–டெக் (Ed–Tech) தளத்தில் செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திர கற்றல் (ML), மேம்படுத்தப்பட்ட உண்மை (AR) மற்றும் மெய்நிகர் உண்மை (VR) போன்ற புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடு மாணவர் சமூகத்திற்கு புதியதொரு கற்றல் சூழ்நிலையினை உருவாக்கியது. மின்–வணிகம் மற்றும் பிற ஆன்லைன் வணிகங்கள் இதுவரை கண்டிராத அற்புதமான வளர்ச்சியைக் கண்டன.

IT மற்றும் ITeS துறையில் முதலீட்டை ஊக்குவிப்பதில் அரசு காட்டும் முனைப்பு தனியார் முதலீடுகளை ஈர்த்து மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு ஒரு முக்கிய பங்களிப்பாளராக தனியார் துறையினை மாற்றும் முக்கிய கருவியாக உள்ளது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் தகவல் தொழில்நுட்பத்

துறையின் திறனை உணர்ந்து, விரைவான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உகந்த வணிகச் சூழலை உருவாக்க தமிழக அரசு தனது முயற்சிகளை பல மடங்கு அதிகரித்துள்ளது. இதன் மூலம், பன்னாட்டு IT மற்றும் ITeS நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கு தமிழ்நாடு விருப்பத் தேர்வாக உருவாகியுள்ளது. உலகப் புகழ்பெற்ற நிறுவனங்கள் தமிழகத்தில் தங்கள் செயல்பாடுகளை ஏற்படுத்தியுள்ளன.

மாநிலத்தில் அமைந்துள்ள அதிநவீன தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC), பேரிடர் மீட்பு மையம் (TNDRC), மேகக் கணிணியத் தளம் மற்றும் சேவைகணினி பண்ணை ஆகியவை அரசுத் துறைகளின் மின்னாளுகை முயற்சிகளுக்கான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் முதுகெலும்பாக செயல்படுகின்றன. மாநிலத்தில் தரவு மையங்களை நிறுவுவதற்கு தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் தரவு மையக் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது.

மாநிலத்தில் தொடக்க நிலை நிறுவனங்களுக்கான சுற்றுச் சூழல் அமைப்பை மேம்படுத்திடவும், வணிக வளர்ச்சிக்குத் தேவையான ஆழமான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பகளுக்கிடையே உள்ள இடைவெளியை நீக்கவும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub) அமைக்கப்பட்டுள்ளது. சமூக நிர்வாகம் மற்றும் சுற்றுச் சூழல் இலக்குகளை தொழில் துறையுடன் இணைந்து சமன் செய்யவும், பொருளாதார வளர்ச்சியினை எட்ட பல்வேறு தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதை உறுதி செய்யும் வகையிலும் சுற்றுச்சூழல் அமைப்பில் உள்ள அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைத்து **"யூமாஜின் சென்னை – 2023"** நிகழ்வு நடத்தப்பட்டது. இதன்மூலம் மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தொழில்நுட்பத்தை எளிதாக அணுகும் வகையில் அரசு துறைகளில்

தொழில்நுட்பத்தின் பயன்பாடு உறுதி செய்யப்படும். இந்நிகழ்வு வெற்றிகரமாக நடந்தேறியது.

அதன் விவரங்கள் பின்வருமாறு:–

i. அமர்வுகளின் எண்ணிக்கை – 119
ii. பேச்சாளர்கள் எண்ணிக்கை – 324
iii. கூட்டு நாடுகளின் எண்ணிக்கை – 15
iv. பதிவு செய்து பங்கேற்றவர்களின் எண்ணிக்கை – 19,239

தேவையான வன்பொருள், மென்பொருள் மற்றும் சோதனைக் கருவிகளுடன் TNSDC–இல் சேவைகளின் பண்ணை உருவாக்கப்பட்டுள்ளது. இது அனைத்து அரசுத் துறைகளும் தங்கள் மென்பொருளை தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் தரவேற்றம் செய்வதற்கு முன், பாதிப்பு மதிப்பீடு மற்றும் ஊடுருவல் சோதனைகளுக்கு உட்படுத்திக்கொள்ள அனுமதிக்கிறது. அரசு இணையதளங்கள்,

சேவைதளங்கள் மற்றும் செயலிகள் ஆகியவற்றில் ஏற்படும் இணைய பாதிப்புகளை விரைவாகத் தீர்க்கும் வகையில் TNSDC–இல் இணைய பாதுகாப்பு கட்டமைப்பு செயல்படுகிறது.

சென்னை மற்றும் பிற இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மையங்களில் (IT Special Economic Zones–ELCOSEZ) உள்ள பல முன்னணி IT & ITeS நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு மாநிலத்தின் மென்பொருள் ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது 2022–2023–இல் 16.4% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்துடன் ரூ.2 இலட்சம் கோடி ஆக உள்ளது. இதன் மூலம், 3,50,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மின்–மாவட்டம், அரசு இ–சேவை மையங்கள் போன்ற மின் ஆளுமை முன்முயற்சிகள்

மக்களுக்கான சேவைகளை விரைவாகவும் எளிதாகவும், வெளிப்படையான முறையிலும் வழங்க அரசுக்கு உதவுகிறது. அரசு துறைகளின் பல்வேறு முன்முயற்சிகளை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கும் வகையில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான சிறப்பு மையம் (CEET) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நிர்வாக முடிவுகளை எடுப்பதில் தரவு முக்கிய பங்கு வகிக்கிறது. நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் பயனாளிகளை அடையாளம் காண தரவு தூய்மை மிக அவசியம். தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையானது மாநிலத்திற்கான தனியான தரவுக் கொள்கை மற்றும் தரவுத் தூய்மை முயற்சிகள் வாயிலாக தரவு சார்ந்த ஆளுகை நுட்பங்களைச் செயல்படுத்துவதில் முக்கியப் பங்காற்றியுள்ளது. இதன் மூலம் நலத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியில் பல கோடி நிதி சேமிக்கப்பட்டுள்ளது. மாநில

குடும்ப தரவுத்தளம் (SFDB) மற்றும் பிளாக்செயின் கட்டமைப்பு ஆகியவை காகிதமற்ற, தொடர்பு இல்லாத மற்றும் வெளிப்படையான சேவைகளை மக்களுக்கு முன்கூட்டியே வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டு வருகின்றன. நிர்வாகத்தை மேம்படுத்தவும் கோப்புகளில் விரைவாக தீர்வு காணவும் தலைமைச் செயலகத்தில் காகிதமற்ற மின் அலுவலக பயன்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சிறந்த தொலைத் தொடர்பு இணைப்பு மற்றும் 5ஜி அலைகற்றை பயன்பாட்டினை உறுதி செய்யவும் வழித்தட உரிமை (Right of Way) செயல்முறைகளை எளிதாக்கவும் தொலைத் தொடர்பு உட்கட்டமைப்பு கொள்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

மின் ஆளுமையில் இணைய இணைப்பு ஒரு முக்கிய அங்கமாகும். தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பு (TNSWAN) 1 GBPS தேசிய அறிவுத்திறன் வலையமைப்புடன் (NKN)

ஒருங்கிணைக்கப்பட்டு மாநிலத்தில் உள்ள 3000க்கும் மேற்பட்ட அரசு அலுவலங்களுக்கு குரல், தரவு, இணையம் மற்றும் ஒலி–ஒளி காட்சி இணைப்புகளை வழங்கி வருகிறது. மாநிலத்தில் உள்ள அனைத்து 12,525 கிராம பஞ்சாயத்துகளிலும் கண்ணாடி இழை வடம் (Optical Fibre Cable) மூலம் அதிவேக இணைய இணைப்புகளை உறுதி செய்வதினை பாரத்நெட் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியான தமிழ்நெட் மாநிலத்தில் உள்ள அனைத்து நகர்ப்புறங்களையும் இணைக்கும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளது. TNSWAN, BHARATNET மற்றும் TAMILNET அகியவற்றை உள்ளடக்கி ஒருங்கிணைந்த டிஜிட்டல் உட்கட்டமைப்பு (UDI) ஒன்று உருவாக்கப்பட்டு மாநிலம் முழுவதும் டிஜிட்டல் மயமாக்கப்படும்.

மின் ஆளுகை மற்றும் சிறந்த சேவை வழங்கலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில்,

தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையானது மற்ற பொறுப்புதாரர்கள் மற்றும் பங்குதாரர்களின் ஆதரவுடன் அனைத்து அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களுக்கு தேவையான உதவிகளை வழங்க முயற்சிக்கிறது.

## அத்தியாயம்–II

## தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT)

### 1. முன்னுரை

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான பொதுத் துறை நிறுவனமாகும். எல்காட் 21.03.1977 இல் மாநிலத்தில் மின்னணுவியலை மேம்படுத்தும் நோக்கத்துடன் நிறுவப்பட்டது.

எல்காட் தமிழக அரசுக்கான மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்புகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த (IT/ITeS) தயாரிப்புகள் / சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் ஊக்குவிப்புகளை மேம்படுத்துவதற்கான முகமை நிறுவனம் ஆகும்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மையான தகவல் தொழில்நுட்ப மையமாக

மாற்றும் ஒரு பெரிய தொலைநோக்கு பார்வையுடன், எல்காட் நான்கு முக்கிய பிரிவுகளான தகவல் தொழில்நுட்ப ஊக்குவிப்பு, தமிழக அரசிற்கான தகவல் தொழில்நுட்ப கொள்முதல், மின்னணுத் துறையின் மேம்பாடு மற்றும் அரசாங்கத் துறைகளுக்கான தரவு மையம் தொடர்பான சேவைகளை வழங்குதல் ஆகியவற்றில் சிறந்து விளங்குகிறது.

## 2. தகவல் தொழில்நுட்ப ஊக்குவிப்பு மற்றும் வளர்ச்சி

தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளை (ITeS) வழங்கும் நிறுவனங்களுக்கு விருப்பத் தேர்வு இடமாக தமிழகத்தை மாற்றுவதில் எல்காட் முக்கிய பங்கு வகிக்கிறது. எல்காட்டின் வளர்ச்சி திட்டமானது உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்புடன் கூடிய தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை உருவாக்குதல், கூடுதல் பொருளாதார செயல்பாடுகளை

உருவாக்குதல், தகவல் தொழில்நுட்ப முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகிய முக்கிய நோக்கங்களை கொண்டு செயல்பட்டு வருகிறது.

எல்காட் 8 தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களை (SEZ) சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை (2 இடங்கள்), திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூர் ஆகிய நகரங்களில் 1288.2 ஏக்கர் நிலப்பரப்பில் (SEZ இல் 1231.65 ஏக்கர் மற்றும் SEZ அல்லாத இடத்தில் 56.55 ஏக்கர்) ரூ.844.57 கோடி முதலீட்டில் உருவாக்கி ஒரு முன்னோடியாக பங்காற்றி வருகிறது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான

(IT/ITeS) முதன்மை முதலீட்டு இடமாக தமிழகத்தை மாற்ற எல்காட் பின்வரும் நிகழ்வுகளில் பங்கேற்றது:

- 05 மே 2022 முதல் 07 மே 2022 வரை இங்கிலாந்தில் நடைபெற்ற "தி ரைஸ் எமர்ஜ் லண்டன் உச்சிமாநாடு"
- ஜூன் 7, 2022 அன்று சென்னையில் நடைபெற்ற "NASSCOM The NEXT உச்சிமாநாடு"
- 5 செப்டம்பர் 2022 முதல் 7 செப்டம்பர் 2022 வரை மும்பையில் நடைபெற்ற இன்ஃபோகாம் இந்தியா 2022 நிகழ்வு
- 1 அக்டோபர் 2022 முதல் 4 அக்டோபர் 2022 வரை புதுடில்லியில் நடைபெற்ற இந்தியா மொபைல் காங்கிரஸ் நிகழ்வு
- துபாயில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் துபாய் உலக வர்த்தக மையத்தில் 10 அக்டோபர் 2022

முதல் 14 அக்டோபர் 2022 வரை நடைபெற்ற “GITEX GLOBAL 2022 நிகழ்வு”

- நவம்பர் 16 முதல் 18 வரை கர்நாடகாவின் பெங்களூரில் உள்ள பெங்களூரு பேலஸில் நடைபெற்ற “பெங்களூர் டெக் உச்சிமாநாடு 2022”
- 17 நவம்பர் 2022 முதல் 18 நவம்பர் 2022 வரை பின்லாந்தின் ஹெல்சின்கியில் நடைபெற்ற “SLUSH 2022”.
- 25 நவம்பர் 2022 அன்று சென்னையில் நடைபெற்ற “TN Web3 – Build Ahead நிகழ்வு”.
- CII–உடன் இணைந்து 2023 மார்ச் மாதம் 23-25 தேதிகளில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற “UMAGINE 2023” (ஒரு உலகளாவிய தொழில்நுட்பம் மற்றும் புதுமை உச்சி மாநாடு)

தகவல் தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்பக் கொள்கை (ICT Policy) 2018-இன்படி, தகவல் தொழில்நுட்ப பூங்காக்களுக்கு FSI பலன்களை பெறுவதற்கான சான்றளிக்கும் நிறுவனமாகவும், தமிழ்நாடு தரவுமையக் கொள்கைக்கான முகமையாகவும் எல்காட் செயல்பட்டு வருகிறது.

## 2.1 எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZ)

### 2.1.1 எல்கோசெஸ் (ELCOSEZ) சோழிங்கநல்லூர், சென்னை

எல்காட் நிறுவனம் சென்னை சோழிங்கநல்லூரில் 377.08 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.258.56 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. எல்காட் இதில் அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி நிர்வாகக் கட்டடத்தை கட்டியுள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | விப்ரோ லிமிடெட் | 80 |
| 2 | எச்.சி.எல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 50 |
| 3 | டெக் மஹிந்திரா பிரைவேட் லிமிடெட் | 50 |
| 4 | ஃபோர்டு மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் | 28 |
| 5 | காக்னிசன்ட் டெக்னாலஜிஸ் சொலுஷன்ஸ் பிரைவேட்லிமிடெட் | 20 |
| 6 | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட் | 15 |
| 7 | தமிழ்நாடு மின்சார வாரியம் | 16 |

இந்த நிறுவனங்கள் 109.31 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தங்களுடைய கட்டடப் பணிகளை முடித்து தற்போது 68,516 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. இந்த தனியார் நிறுவனங்கள், மென்பொருள் உருவாக்கம் (Software Development), பராமரிப்பு மற்றும் சோதனை (Maintenance and Testing), ஆலோசனை (Consulting)மற்றும் வணிக வெளிப்பணி சேவைகள் (Business Process Outsourcing) போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

**வரவிருக்கும் புதிய தகவல் தொழில்நுட்பக் கோபுரம் (Upcoming IT Tower)**

ஏற்றுமதி சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்களின் இட தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு 2.33 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கோபுரத்தின்

கட்டுமானப் பணிகள், ரூ.88.21 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடமானது மே, 2023–இல் திறக்கப்பட உள்ளது.

### 2.1.2 எல்கோசெஸ் (ELCOSEZ) – விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்

எல்காட் நிறுவனம் கோயம்புத்தூர் விளாங்குறிச்சியில் 61.59 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.217.46 கோடி முதலீட்டில் எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது. எல்காட் இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, நிர்வாக கட்டடத்தை கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | விப்ரோ லிமிடெட் | 9.5 |
| 2 | டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் | 9.5 |

இந்த நிறுவனங்கள் 23 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி 16,809 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

**வரவிருக்கும் புதிய தகவல் தொழில்நுட்பக் கோபுரம் (Upcoming IT Tower):**

எல்கோசெஸ்–விளாங்குறிச்சி, கோயம்புத்தூர் எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைநிறுவனங்களின் இட தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு மேலும் 2.66 இலட்சம் சதுர அடி

பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ரூ.114.16 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இந்த தகவல் தொழில்நுட்ப கட்டடமானது மே, 2023-இல் திறக்கப்பட உள்ளது.

### 2.1.3 எல்கோசெஸ் (ELCOSEZ) – இலந்தைக்குளம், மதுரை

எல்காட் நிறுவனம், மதுரை மாவட்டம் இலந்தைக்குளத்தில், 28.91 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.34 கோடி முதலீட்டில் எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது.

இதில் எல்காட் நிறுவனம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கி, 60,652 சதுர அடி கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)** |
|---|---|---|
| 1 | ஹனிவெல் டெக்னாலஜிஸ் லிமிடெட் | 11.25 |
| 2 | எச்.சி.எல் டெக்னாலஜிஸ் லிமிடெட் | 6.75 |
| 3 | செல்லா சாஃப்ட்வேர் பிரைவேட் லிமிடெட் | 2.25 |
| 4 | தமிழ்நாடு மின்சார வாரியம் | 0.58 |

இது தவிர, 6650 சதுர அடி நிலப்பரப்பில், ரீபார் டிசைன் & டீடெயில் பிரைவேட் லிமிடெட்

நிறுவனத்துக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த தனியார் நிறுவனங்கள் 7.22 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி இயங்கி வருகின்றன.

மேலும், நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் கீழ்காணும் நிறுவனங்களுக்கு இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .

| **வ.எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)** |
|---|---|---|
| 1 | கேலக்சி இன்ஃபோடெக் | 2,508 |
| 2 | ரீபார் டிசைன் & டீடெயில் பிரைவேட் லிமிடெட் | 3,724.12 |
| 3 | எஸ்.பி.எல் நாலெட்ஜ் சர்வீசஸ் லிமிடெட் | 15,181 |

| | | |
|---|---|---|
| 4 | நியாமோ என்டர்பிரைசஸ் சொலுயுசன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 30,103 |
| 5 | ப்ரொஃபிசியோ ஐ.டி சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 9,136 |

இந்த நிறுவனங்கள் ஆலோசனை, செயலி மேம்பாடு, வணிக வெளிப்பணி சேவைகள் (BPO) மற்றும் தரவு மின் உருவாக்கம் போன்ற பணிகளை மேற்கொண்டு தோராயமாக 8,040 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

### 2.1.4 எல்கோசெஸ் (ELCOSEZ) – வடபழஞ்சி, மதுரை

மதுரையிலுள்ள வடபழஞ்சி கிராமத்தில் எல்காட் நிறுவனம் 245.17 ஏக்கர் நிலப்பரப்பில் (SEZ இல் 213 ஏக்கர் மற்றும் SEZ அல்லாத இடத்தில் 32.17 ஏக்கர்) ரூ.70 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதில் அனைத்து

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் எல்கோசெஸ்க்கு தேவைப்படுகின்ற மேம்பாலத்தையும் உருவாக்கி, 70,139 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | நில ஒதுக்கீட்டின் அளவு(ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | எச்.சி.எல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 60 |
| 2 | செயின்–சிஸ் சாஃப்ட்வேர் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் | 20 |
| 3 | பினாக்கிள் இன்போ டெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 34.09 |

| | | |
|---|---|---|
| 4 | ஜாபின் அண்டு ஜிஸ்மி ஐ.டி சர்வீசஸ் எல்.எல்.பி | 4 |
| 5 | சாஷ்மா க்லொபல் ப்ரைவேட் லிமிடெட் | 1.5 |
| 6 | ஆப்டிசோல் பிசினெஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 8.25 |
| 7 | குளோபல் அசோசியேட்ஸ் | 4 |
| 8 | ஆசிஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் | 3.53 |
| 9 | அக்செஸ் ஹெல்த்கேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் | 4.01 |
| 10 | க்ளவுட் வான்டேஜ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 3.16 |
| 11 | டியூ இன்ஃபொ–சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் | 10.19 |

இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு 64,980 சதுர அடிபரப்பளவில் இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்) |
|---|---|---|
| 1 | நீயாமோ என்டர்பிரைஸ் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 46,968 |
| 2 | நீயாமோ ஒர்க்ஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 11,543 |
| 3 | செயின்–சிஸ் சாப்ட்வேர் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் | 6,469 |

இந்த நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் பிரிவுகளான ஆலோசனை, சம்பளப்பட்டியல் செயலாக்க மென்பொருள் மற்றும் தகவல்கள் மின் உருவாக்கம் போன்ற பணிகளை மேற்கொண்டு 1077 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

### 2.1.5 எல்கோசெஸ் (ELCOSEZ) – நவல்பட்டு, திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளியிலுள்ள நவல்பட்டு கிராமத்தில் எல்காட் நிறுவனம் 147.61 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.80.55 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதில் 123.23 ஏக்கர் நில பரப்பளவு, சிறப்பு பொருளாதார மண்டலமாக உள்ளது. இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி, 59,960 சதுரஅடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில் நுட்ப கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)** |
|---|---|---|
| 1 | ஐ லிங்க் மல்டிடெக் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 2 |
| 2 | எஸ்கே டிசைன் அன்ட் ஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் | 3 |
| 3 | தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது | 0.6 |

இந்த நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு 59,960 சதுர அடி இட வசதி முழுமையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்) |
|---|---|---|
| 1 | ஐ லிங்க் மல்டிடெக் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 6,668 |
| 2 | சயின்டிஃபிக் பப்ளிஷிங் சர்வீஸஸ் | 30,250 |
| 3 | வரம் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 5,976 |
| 4 | வி டார்ட் டெக்னாலஜிஸ் | 3,643 |
| 5 | பேரிடர் மீட்பு மையம். | 5,963 |
| 6 | ஜிஐ டெக் கேமிங் கம்பெனி இந்தியா பிரைவேட் லிமிடெட் | 4,919 |
| 7 | விஆர் டெல்லா ஐடி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் | 2,541 |

இந்த நிறுவனங்கள் மின் வெளியீடு, (e-Publishing), மென்பொருள் உருவாக்கம் (Software Development), வணிக செயல்முறை மேலாண்மை சேவைகள் மற்றும் தீர்வுகள் (Business Process Management Services & Solutions), விளையாட்டு மென்பொருள் உருவாக்கம் (Gaming Software Development) போன்ற பணிகளை மேற்கொண்டு 1,482 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

**வரவிருக்கும் புதிய தகவல் தொழில்நுட்பக் கோபுரம் (Upcoming IT Tower):**

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைநிறுவனங்களின் இட தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, மேலும், 1.16 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கோபுரக் கட்டுமானப் பணிகள் ரூ.48.10 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு விரைவில் திறக்கப்பட உள்ளது.

## 2.1.6 எல்கோசெஸ் (ELCOSEZ)– கங்கைகொண்டான், திருநெல்வேலி

திருநெல்வேலியிலுள்ள கங்கைகொண்டான் கிராமத்தில் எல்காட் நிறுவனம் 200 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூ.55 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி அதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 57,107 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது. கீழ்கண்ட நிறுவனங்களுக்கு மொத்தம் 9464 சதுர அடி இடம் ஒதுக்கப்பட்டு 110 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகின்றது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்) |
|---|---|---|
| 1 | கேலிபெர் இன்டெர்கனெக்ட் சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 5994 |

| | | |
|---|---|---|
| 2 | நோவிகோ பார்ட்னர்ஸ் பிரைவேட் லிமிடெட் | 3470 |

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)** |
|---|---|---|
| 1 | சின்டெல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் | 100 |
| 2 | ஃபிஷின் இந்தியா பிரைவேட் லிமிடெட் | 33.57 |
| 3 | ரேஞ்சர் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 1 |

இந்த எல்கோசெஸ்ஸில் சின்டெல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (M/s Syntel International Pvt. Ltd) நிறுவனத்திற்க்கு ஒதுக்கப்பட்ட 100 ஏக்கர் நிலப்பரப்பில், அந்நிறுவனம் 2.60 இலட்சம் சதுர அடி பரப்பிலான தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்து, 152 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றது.

**2.1.7 எல்கோசெஸ் (ELCOSEZ) ஜாகீர்அம்மாபாளையம், சேலம்**

எல்காட் நிறுவனம், சேலம் ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில், 53.33 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.44 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன், 62,174 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)** |
|---|---|---|
| 1 | மகிமா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 5.501 |
| 2 | வீ. டெக்னாலஜிஸ் | 9.49 |
| 3 | டான் டிரான்ஸ்கோ லிமிடெட் | 7.88 |
| 4 | இ–முத்ரா லிமிடெட் | 2.5 |
| 5 | அன்மால் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 1 |
| 6 | ஃபோகஸ் ஆர் கன்சல்டன்சி அண்டு டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் | 1 |
| 7 | நியூராடெக் கன்சல்டன்சி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் | 6.877 |

இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு 55,060 சதுர அடி பரப்பளவில், இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)** |
|---|---|---|
| 1 | இமுத்ரா லிமிடெட் | 2,989 |
| 2 | ரீவெய்ல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 3,704 |
| 3 | நியூராடெக் கன்சல்டன்சி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் | 3,704 |
| 4 | டைலாஜி சொல்யூஷன்ஸ் எல்எல்பி | 1,000 |
| 5 | நாலெட்ஜ் லென்ஸ் பிரைவேட் லிமிடெட் | 1,000 |
| 6 | ஸ்டின் சாஃப்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 989 |
| 7 | வீ டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 21,124 |

| | | |
|---|---|---|
| 8 | வீ இமேஜிங் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 10,562 |
| 9 | மஹிமா டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட் | 3,448 |
| 10 | ஸீலஸ் சர்வீஸஸ் | 6,540 |

இந்த நிறுவனங்கள் 787 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

### 2.1.8 எல்கோசெஸ் (ELCOSEZ)– விஸ்வநாதபுரம்,ஓசூர்

எல்காட் நிறுவனம், விஸ்வநாதபுரம் கிராமம், ஓசூரில் 174.47 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.85 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன், 62,100 சதுர அடி பரப்பளவில் நிர்வாக மற்றும் தகவல்தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பயன்பாட்டுக்கு 12 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு 34,639 சதுர அடிபரப்பளவில், இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)** |
|---|---|---|
| 1 | யு.எஸ். டெக்னாலஜி இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் | 21,100 |
| 2 | சந்து சாஃப்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 10,550 |
| 3 | தென்றல் இன்ஃபோடெக் | 2,989 |

இந்த நிறுவனங்கள் தோராயமாக 100 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

மேலும், இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)** |
|---|---|---|
| 1 | ஐ.ஏ.எம்.பி.எல் | 12.04 |
| 2 | டைலாஜி சொல்யூஷன்ஸ் எல்.எல்.பி | 8.93 |

## 2.2 பல்துறை சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (Multi Sector Special Economic Zones)

அரசு ஆணை (**நிலை**) **எண்**.787, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நில முடிவு (**நி.மு**.5(1)) பிரிவு 22.11.2021 தேதியிட்ட உத்தரவுப்படி, எல்காட் மூலம் செயல்படும் அனைத்து

தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களையும் பல்துறை சிறப்புப் பொருளாதார மண்டலங்களாக பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது, அனைத்துத் துறைகளிலிருந்தும் நிறுவனங்களைக் கொண்டுவர எல்காட் செயல்பட்டு வருகிறது.

## 3. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

மக்களுக்கு மின்னாளுகை சேவைகளை வழங்குவதற்கும் அரசுத்துறைகளுக்கு இணைப்பு வழங்குவதற்கும் தேவையான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை 2007 முதல் எல்காட் நிறுவனம் உருவாக்கி பராமரித்து வருகிறது.

### 3.1 வலையமைப்பு சேவைகள்

#### 3.1.1 தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பானது தேசிய மின் ஆளுமைத்

திட்டத்தின் (NeGAP) கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புடன் 2007-இல் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும்.

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு 708 இருப்பு முனைகளுடன் (PoPs) தொடங்கப்பட்டு, தற்போது 829 இருப்பு முனைகளுடன் இயங்கி வருகிறது. பல்வேறு அரசுத் துறைகளின் சுமார் 3000+ அலுவலகங்களுக்கு TNSWAN இணைப்பு வழங்குவதன் மூலம், அரசுத்துறைகள் தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தமது பயன்பாடுகள், சேவைகள் மற்றும் சேவையகங்களைப் பாதுகாப்பான முறையில் அணுக உதவுகிறது.

பொதுமக்களுக்குத் தரமான சேவைகளை வழங்கும் பொருட்டு அனைத்து அரசுத் துறைகளுக்கும் குரல், தரவு மற்றும் காணொளி

இணைப்பு வசதியைத் தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு வழங்கி வருகிறது.

2015 வருடம் முதல் ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் (MeitY, GoI), வழிகாட்டுதலின்படி தேசிய அறிவுத்திறன் வலையமைப்பானது (National Knowledge Network - NKN) தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் மாவட்ட இருப்பு முனைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

### 3.1.2 தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட விரிவாக்கம்

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட செயல்பாட்டினை 13 பிப்ரவரி 2023 வரை நீட்டிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் கால அளவினை மேலும்

நீட்டிக்க எல்காட் அளித்த பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 3.2 பிற இணைப்புச் சேவைகள்

### i) MPLS VPN (1:1) இணைப்பு

Multi- Protocol Label Switching Virtual Private Network (MPLS VPN) இணைப்பானது TNSWAN இணைப்புக்கு பதிலி இணைப்பாக வழங்கப்படுகின்றது. எல்காட் நிறுவனம், ஏறத்தாழ 88 அரசு அலுவலகங்களுக்கு MPLS VPN இணைப்பை வழங்கி வருகிறது.

### ii) இணையக் குத்தகை இணைப்பு (ILL)

இணையக் குத்தகை இணைப்பு, சுமார் 281 அரசு அலுவலகங்களுக்கு தனிப்பட்ட இணைப்பாக வழங்கப்பட்டு வருகிறது.

**iii) VPNoBB இணைப்பு**

Virtual Private Network Over Broadband (VPNoBB) இணைப்பானது குறைந்த செலவில் குறைந்த அலைவரிசை அகஇணைய இணைப்பிற்கு மாற்றாக விளங்குகிறது. எல்காட் நிறுவனம் ஏறத்தாழ 290 அரசு அலுவலகங்களுக்கு VPNoBB இணைப்புச் சேவைகளை வழங்கி வருகிறது.

## 3.3 தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்

### 3.3.1 தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்–I (TNSDC–I)

தமிழ்நாடு மாநிலத் தரவு மையம், நாட்டிலேயே முதன்முறையாக ISO சான்றிதழ் பெற்ற மாநிலத் தரவு மையமாகும். இம்மையத்தின் செயல்பாடுகள் 2011-இல் தொடங்கப்பட்டு 12 வருடத்திற்கான திட்ட மதிப்பீடான ரூ.138 கோடி செலவினத்தில், சுமார் 62 அடுக்குகளுடன் இயங்கி வருகிறது. தற்போது வரை, 318க்கும் மேற்பட்ட பயன்பாடுகள்/ சேவைகள்

TNSDC-I, TNSDC-II மற்றும் மேகக்கணினி அமைப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 3.3.2 தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்- II (TNSDC II)

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தின் இரண்டாம் கட்டம் ரூ.74.7 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது. முதன் முதலில் 07.09.2020 அன்று 35 அடுக்குகளுடன் செயல்படத் தொடங்கிய இந்தத் தரவு மையமானது 138 அடுக்குகளுக்கு இடமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது வரை 56 அடுக்குகள் நிறுவப்பட்டு கிட்டத்தட்ட 100% பயன்பாட்டை எட்டியுள்ளது. இந்தத் தரவு மையம் 56 கூடுதல் அடுக்குகளுடன் மேலும் விரிவுபடுத்தப்படுகிறது. தமிழக அரசுத் துறைகளின் சுமார் 50 பயன்பாடுகள், TNSDC II-இல் பதிவேற்றம் செய்யப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

## 3.4 தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (TNDRC)

எல்காட் நிறுவனம், தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தை நிறுவியுள்ளது. இதன்மூலம் அரசுத் துறைகள் தங்கள் பயன்பாடுகள் / சேவைகளைப் பொதுவான, பாதுகாப்பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் வழங்க உதவுகிறது. இருப்பினும், இயற்கைப் பேரழிவுகள் தொடர்பான அபாயங்கள் ஒரு கடுமையான சவாலை ஏற்படுத்துகின்றன. எனவே, மாநிலத் தரவு மையத்தில் வழங்கப்படும் பல்வேறு மின் ஆளுமைப் பயன்பாடுகளின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு வணிகத் தொடர்ச்சியை உறுதிப்படுத்த பேரிடர் மீட்பு மையத்தை (DRC) நிறுவுவது கட்டாயமாகிறது.

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அரசுத்துறைகளின் முக்கிய மின் ஆளுகைப் பயன்பாடுகளைப் பேரிடர்களின் போதும் தடையின்றித் தொடர்ச்சியாகச்

செயல்படுத்திட ஏதுவாக, திருச்சிராப்பள்ளியில் உள்ள எல்கோசெஸ்–இல் பேரிடர் மீட்பு மையம், 2018-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

## 3.5 தமிழ் மேகம் - தமிழ்நாடு மேகக் கணினியச் சேவைகள்

எளிய மேலாண்மையுடன் கணினி வளங்களைப் பகிர்ந்தளிக்கக்கூடிய மேகக் கணினியச் சேவை, தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் 2016-ஆம் ஆண்டு, ரூ.14.40 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டு, தற்போது 7 ஆவது ஆண்டிற்கான செயல்பாடுகள் மற்றும் பராமரிப்புப் பணிகளுடன் தொடர்ந்து சேவை அளிக்கப்பட்டு வருகிறது. மேகக் கணினியச் சேவையில் உட்கட்டமைப்பு (Infrastructure) மற்றும் இயங்குதளம் (Platform) ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன. தற்போது வரை சுமார் 180 மென்பொருள் பயன்பாடுகள் மற்றும் சேவைகள் பதிவேற்றம் செய்யப்பட்டு, இயங்கி வருகின்றன.

ரூ.9.98 கோடி மதிப்பீட்டில் மேகக்கணினிய உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டதுடன் பேரிடர் மீட்பு வசதியும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

**3.6 மின்னணுப் பாதுகாப்பு (e–Security)**

TNSDC-க்கான பாதுகாப்புக் கட்டமைப்பு அரசுத் துறைகளின் பயன்பாடுகள்/சேவைகள் ஆகியவற்றின் தரவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக, உயர்நிலை ரூட்டர், அடுத்த தலைமுறை ஃபயர்வால், சேவை விநியோக மறுப்பு (DDOS), வலைப் பயன்பாட்டு ஃபயர்வால் (WAF), ஊடுருவல் தடுப்பு அமைப்பு (IPS), ஊடுருவல் கண்டறிதல் அமைப்பு (IDS), மெய்நிகர் தனியார் வலையமைப்பு (VPN), ஒருங்கிணைப்பி (Concentrator) மாடுலர் கோர் ஸ்விட்ச் மற்றும் பாதுகாப்பு தகவல் மற்றும் நிகழ்வு மேலாண்மை (SIEM) ஆகியவற்றுடன் உயர்நிலைப் பாதுகாப்புக் கட்டமைப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது. பாதிப்பு மதிப்பீடு மற்றும்

ஊடுருவல் சோதனை (VAPT) யானது பயன்பாடுகள்/சேவைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக CERT-IN நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகமைகள் மூலம் TNSDC தரவேற்றம் செய்யப்பட்ட பயன்பாடுகள்/சேவைகள் மீது அவ்வப்போது நடத்தப்படுகிறது.

### 3.7 தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பு (CSA-TN)

இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் தாக்குதலை எதிர்கொள்ள ஏதுவாக, தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்புக்காக (CSA-TN), தமிழ்நாடு மின்னணு நிறுவனம் சென்னையிலுள்ள C-DAC நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ரூ.21.39 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தகவல் பாதுகாப்பு மேலாண்மை அமைப்பின் (ISMS) மூன்று தூண்களாக விளங்கும் மக்கள், செயல்பாடு

மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை கீழ்க்கண்டவாறு வலுப்படுத்தப்பட்டுள்ளன:–

**மக்கள்**

அ. இணையம் தொடர்பான ஏதேனும் சிக்கல்கள்/ அச்சுறுத்தல்கள் ஏற்பட்டால், துறை ஊழியர்களைத் தொடர்பு கொள்வதற்காக, துறைகளில், தலைமைத் தகவல் பாதுகாப்பு அலுவலர் (CISO)/தகவல் பாதுகாப்பு அலுவலர் (ISO) நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஆ. அரசுத்துறை அதிகாரிகளுக்கு அவரவர் துறைகளின் தகவல் தொழில்நுட்ப உடமைகளை எவ்வாறு பாதுகாப்பது மற்றும் இணையப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் நேர்ந்தால் எவ்வாறு புகார் அளிப்பது என்பது

குறித்து வகுப்பறை மற்றும் மெய்நிகர் அடிப்படையிலான பயிற்சி தமிழகம் முழுவதும் வழங்கப்படுகிறது.

இ. சைபர் செக்யூரிட்டி இன்சிடென்ட் ரெஸ்பான்ஸ் டீம் – இணையச் சம்பவம் நடந்தால், உடனடியாகப் பதிலளிப்பதற்கும் மீட்டெடுப்பதற்கும் இணைய பாதுகாப்பு குறித்த பயிற்சிபெற்ற நிபுணர்கள் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது.

**செயல்பாடு**

அ. தேசிய தரம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (NIST) – NIST இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பானது, இணையப் பாதுகாப்புத் திட்டத்தை ஒழுங்கமைக்கவும், மேம்படுத்தவும், ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். இது அடையாளம் காணுதல், பாதுகாத்தல், கண்டறிதல், பதிலளித்தல் மற்றும்

மீளப்பெறுதல் ஆகிய 5 முக்கியச் செயல்பாடுகளின் மூலம் நிறுவனங்கள் தங்கள் இணையப் பாதுகாப்பு நிலையை உருவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் உதவும் வழிகாட்டுதல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் தொகுப்பாகும். மாநில அளவிலான இணையப் பாதுகாப்புத் திட்டத்திற்காக NIST- வழிகாட்டுதல்களை செயல்படுத்துவதில் CSA-TN முன்னோடியாக உள்ளது.

ஆ. அச்சுறுத்தல்களை அடையாளம் கண்டு பாதுகாப்பதற்கு வலுவான இணைய பாதுகாப்புக் கொள்கை வெளியீடு.

இ. CSA–TN-இன் உதவி மையம், அரசுத் துறைகளின் மீட்பு நடவடிக்கைகளுக்காக நிறுவப்பட்டுள்ளது. சீர்குலைத்தல் / ஊடுருவல் / மீறல் போன்றவற்றை விரைவாக

மற்றும் நம்பக தன்மையுடன் கண்டறிதல், பதிலளித்தல் மற்றும் இணையச் சம்பவங்களில் இருந்து மீளப்பெறுதல் ஆகியவற்றிற்கு இம்மையம் துணை நிற்கிறது.

ஈ. இணைய மீள் திறனுக்கான இணைய நெருக்கடி மேலாண்மைத் திட்டம். (Cyber Crisis Management Plan – CCMP) இணையத்தில் சிக்கலான ஒரு நேர்வு ஏற்பட்டால், ஒரு நிறுவனம் அதற்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது குறித்துத் தயாராக வரையறை தீட்டி வைத்திருப்பது, அதன் இணையப் பாதுகாப்புத் திட்டத்தின் வெற்றி மற்றும் தோல்விக்கு இடையேயான வித்தியாசத்தை உருவாக்குகிறது. நெருக்கடி மேலாண்மைக் குழு (Crisis Management Group – (CMG) மற்றும் நெருக்கடி மேலாண்மைப்பிரிவு (Crisis Management Cell - CMC) ஆகியவை சம்பவங்களைக்

கண்டறித்து குறைக்கும் வேகம். அவற்றின் அபாயங்கள், செலவு மற்றும் வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஒரு விரிவான இணைய நெருக்கடி மேலாண்மைத் திட்ட ஆவணம் உருவாக்கப்பட்டு வருகிறது.

உ. குறிப்பிட்ட இடைவெளியில் மாநிலம் முழுவதும் உள்ள அமைப்புகள் / பணி நிலையங்களைத் தணிக்கை செய்யத் திட்டமிடப்பட்டு ஏற்கெனவே செயல்பாடுகள் தொடங்கப்பட்டுவிட்டன.

**தொழில்நுட்பம்**

அ. முக்கியமான இணையச் சொத்துக்களைக் கண்காணிக்க முழுமையான பாதுகாப்புச் செயல்பாட்டு மையம் (SOC) மற்றும் வலையமைப்புச் செயல்பாட்டு மையம் (NOC)

ஆகியவை CSA-TN-இன் ஒரு பகுதியாக நிறுவப்பட்டுள்ளன.

ஆ. பாதுகாப்புத் தகவல் மற்றும் நிகழ்வு மேலாண்மை (SIEM) தீர்வு, பாதுகாப்பு செயல்பாட்டு மையத்தின் (SOC-TN) ஒரு பகுதியாக முக்கியமான தகவல் தொழில்நுட்ப உடமைகள் மீதான தாக்குதல்களைத் தடுக்க நிறுவப்பட்டுள்ளது. நாளது வரையில், சுமார் 5,000 ப்ருட் ஃபோர்ஸ் பயனர் அணுகல் நிகழ்வுகள் கண்டறியப்பட்டன. சுமார் 60 சேவை நடவடிக்கைகளின் மறுப்பு கண்டறிப்பட்டன. சுமார் 4500 பக்கவாட்டு நகர்தல் நிகழ்வுகள் கண்டறியப்பட்டன.

இ. வைரஸ் தடுப்பு நிறுவல்- தலைமைச் செயலகத்தில் இணையத் தாக்குதலைத் தடுக்க, சுமார் 2,533 கணினிகள் அடையாளம் காணப்பட்டு முழுமையாக ஸ்கேன்

செய்யப்பட்டன. சுமார் 813 கணினிகளில் வைரஸ் தடுப்பு (AV) மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது.

## 4. மின்ஆளுமை

### 4.1 ஆதார் நிரந்தரப் பதிவு மையங்கள் (PECs)

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தினால் (UIDAI) அங்கீகரிக்கப்பட்ட முகமைகளுள் ஒன்றான எல்காட் நிறுவனம், ஆதார் பதிவு நடவடிக்கைகளைச் செயல்படுத்தி வருகிறது. இதன் பொருட்டு, எல்காட் நிறுவனம் 237 நிரந்தரப் பதிவு மையங்களை 33 மாவட்ட ஆட்சியரகங்கள், 18 மாநகராட்சித் தலைமை அலுவலகங்கள், 42 மாநகராட்சி மண்டல அலுவலகங்கள், 114 நகராட்சி அலுவலகங்கள், 8 பேரூராட்சி அலுவலகங்கள், 2 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள், 15 வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், 4 கிராமப் பஞ்சாயத்து

அலுவலகங்கள் மற்றும் 1 பொதுவைப்பு நிதி அலுவலகம் ஆகியவற்றில் ஏற்படுத்தியுள்ளது.

31.01.2023 வரை இந்த மையங்களின் வாயிலாக 87,89,309 ஆதார் பரிவர்த்தனைகள் நடந்துள்ளன.

| **வ. எண்** | **நிதி ஆண்டு** | **ஆதார் புதிய சேர்க்கை எண்ணிக்கை** | **ஆதார் குடிவிவரவியல் புதுப்பித்தல் எண்ணிக்கை** | **மொத்த பரிவர்த்தனை எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1 | அக்டோபர் 2016-மார்ச் 2017 | 5,40,741 | 17,764 | 5,58,505 |
| 2 | ஏப்ரல் 2017-மார்ச் 2018 | 6,71,052 | 9,43,269 | 16,14,321 |
| 3 | ஏப்ரல் | 3,63,500 | 13,22,042 | 16,85,542 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2018- மார்ச் 2019 | | | |
| 4 | ஏப்ரல் 2019- மார்ச் 2020 | 2,64,333 | 10,92,930 | 13,57,263 |
| 5 | ஏப்ரல் 2020- மார்ச் 2021 | 1,30,963 | 9,36,257 | 10,67,220 |
| 6 | ஏப்ரல் 2021- மார்ச் 2022 | 2,56,765 | 10,97,249 | 13,54,014 |
| 7 | ஏப்ரல் 2022- ஜனவரி 2023 | 2,27,129 | 9,25,315 | 11,52,444 |
| **மொத்தம்** | | **24,54,483** | **63,34,826** | **87,89,309** |

## 4.2 சமக்ரஷிக்க்ஷா–வின் கீழ்க் கல்வித் தொகுதிகளில் ஆதார் சேவை மையங்கள் நிறுவப்பட்ட விவரங்கள்

பள்ளி மாணவர்களுக்கு ஆதார் தொடர்பான சேவைகளை வழங்குவதற்காக, அனைத்து 385 கல்வித் தொகுதிகளிலும், 505 இடங்களில் ஆதார் சேவை மையத்தை நிறுவ, பள்ளிக் கல்வித் துறை சமக்ரஷிக்க்ஷா, எல்காட் நிறுவனத்தை ஒரு பதிவு முகவராகத் தேர்வு செய்துள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக 03–01–2022 முதல் 120 வட்டார வள மையங்களில் 120 ஆதார் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மையங்களின் வாயிலாக 31.01.2023 வரை 4,39,780 ஆதார் பரிவர்த்தனைகள் நடந்துள்ளன.

| வ. எண் | நிதி ஆண்டு | ஆதார் புதிய சேர்க்கை எண்ணிக்கை | ஆதார் குடிவிவரவியல் புதுப்பித்தல் எண்ணிக்கை | மொத்த பரிவர்த்தனை எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | ஜனவரி 2022- மார்ச் 2022 | 16,604 | 57,048 | 73,652 |
| 2 | ஏப்ரல் 2022- ஜனவரி 2023 | 68,242 | 2,97,886 | 3,66,128 |
| **மொத்தம்** | | **84,846** | **3,54,934** | **4,39,780** |

## 5. கொள்முதல் பிரிவு

அரசுத் துறைகள்/ பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளுக்கு தகவல் தொழில்நுட்ப வன்பொருட்களுக்கான விருப்பக் கொள்முதல் முகமையாக 16.02.1999 தேதியிட்ட அரசாணை (நிலை) எண்.58-இன் படி எல்காட் செயல்பட்டு வருகிறது.

தகவல் தொழில்நுட்ப வன்பொருட்களான மேஜைக் கணினி, மடிக்கணினி, கணினி சேவையகம் (Server), அச்சுப் பொறி (Printer), நகல் பொறி (Copier), வருடு பொறி (Scanner), தடையில்லா மின்சாதனம் (UPS), மற்றும் இதர தகவல் தொழில்நுட்பச் சாதனங்களை அரசுத் துறை / அரசுத் துறை சார்ந்த நிறுவனங்களுக்குக் கொள்முதல் செய்து எல்காட் வழங்கிவருகிறது. மேஜைக் கணினி, மடிக்கணினி, அச்சுப் பொறி (Printer) மற்றும் இதர தகவல் தொழில்நுட்ப சாதனங்களை அதிக அளவில் கொள்முதல் செய்வதால், தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள், எல்காட்டின் ஒப்பந்தப்புள்ளிகளில் விருப்பமுடன் பங்கேற்பதால் நியாயமான விலையில் தரமான பொருட்களைக் கொள்முதல் செய்து வழங்குகிறது.

அரசுத் துறைகளுக்குத் தேவையான வன்பொருட்களை, இரண்டு விதமான

ஒப்பந்தப்புள்ளிச் செயல்முறைகள் மூலம் எல்காட் கொள்முதல் செய்கிறது.

1. ஒப்பந்த விலைக் கொள்முதல் - முதன்மையான விற்பனையாளர்களிடம் விகித ஒப்பந்தப்புள்ளி மூலம் அரசுத் துறைகளுக்குத் தேவையான வன்பொருட்களை ஆண்டு முழுவதும் ஒரே விலையில் கொள்முதல் செய்து வழங்குவது
2. துறையின் தனித்துவமான தேவைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி - அரசுத் துறைகளுக்குத் தேவையான தனித்துவமான தகவல் தொழில்நுட்ப வன்பொருளைத் தனி ஒப்பந்தப்புள்ளிமூலம் கொள்முதல் செய்து வழங்குவது.

எல்காட் பல்வேறு வகையான வன்பொருட்களை வகைப்படுத்தி விகித ஒப்பந்தப்புள்ளி வாயிலாகக் கொள்முதல் செய்வதால்

சிறந்த விலையில் பெற்றுத்தர முடிகிறது. எல்காட்டின் மின்கொள்முதல் இணைய முகப்பு மூலம் வன்பொருளின் விலைப்பட்டியல் பெறுதல், பணம் செலுத்திய விவரத்தை உள்ளீடு செய்தல் மற்றும் கொள்முதல் ஆணை வழங்கக்கோருதல் ஆகியவைகளை அரசுத் துறைகள் மேற்கொள்ள முடியும். இந்தக் கொள்முதல் இணைய முகப்பு மூலம் அரசுத் துறையின் கொள்முதல் நடவடிக்கைகள் நெறிப்படுத்தப்பட்டு, வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட ஏதுவாக உள்ளது. எல்காட் 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.300 கோடி மதிப்பிலான தகவல் தொழில்நுட்ப வன்பொருள் சாதனங்களையும் வரும் 2023-24 நிதியாண்டில் ரூ.400 கோடி மதிப்பிலான தகவல் தொழில்நுட்ப வன்பொருள் சாதனங்களையும் கொள்முதல் செய்து வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப பழைய பதிவுகள் / புத்தகங்கள் / ஆவணங்கள்/

கையெழுத்துப் பிரதிகள்/பனை ஓலைச் சுவடிகள் போன்றவற்றை மின்னுருவாக்கப் படங்களாக மாற்றும் பணியை எல்காட் செய்து வருகிறது.

காணொலிக்காட்சி மூலம் பல்வேறு அரசுத் துறைகளின் நலத்திட்டப் பணிகளைத் துவங்குதல் மற்றும் கூட்டங்களை நடத்துதல் போன்றவைகளை எல்காட் மேற்கொண்டு வருகிறது. அரசுத்துறைகள் மற்றும் முகமைகள், தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்றவைகள் நடத்தும் தேர்வுகளைக் கண்காணிப்பதற்குத் தேவையான கருவிகள் மற்றும் சேவைகளையும் எல்காட் வழங்கி வருகிறது.

தலைமைச் செயலகத்தின் வலையமைப்பு வசதி மற்றும் அங்குள்ள முதன்மைக் கட்டடம் மற்றும் நாமக்கல் கவிஞர் மாளிகையின் கண்காணிப்புக் கருவிகளை முழு நேரமும் (24x7) கண்காணிக்கும் அமைப்புகளை எல்காட்

பராமரிக்கிறது. இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கான மடிக்கணினி, கையடக்கக் கணினி (Tablet) வழங்கும் பணிகளையும் எல்காட் மேற்கொள்கிறது.

**அத்தியாயம்–III**

# மின்–ஆளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின்–ஆளுமை முகமை

## 1. முன்னுரை

தகவல் தொழில்நுட்பம் என்பது ஆளுமையை எளிமையாகவும், வெளிப்படையாகவும், பொது மக்களை மையப்படுத்தியதாகவும் உருமாற்றிடும் ஒரு கருவியாகும். இக்குறிக்கோளை எய்திட 2006–ஆம் ஆண்டில் **மின் ஆளுமை இயக்குநரகம்** உருவாக்கப்பட்டது. திறமையான மற்றும் துரிதமான அணுகுமுறை இத்துறைக்குத் தேவைப்பட்டது. எனவே, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தகவல் தொழில்நுட்பக் கருவிகள் மூலம் அரசின் சேவைகளை குறைந்த செலவில் திறமையாக வழங்குவதற்காக, 2007–ஆம் ஆண்டில் தமிழ்நாடு

சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975–இன் கீழ் **தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA)** பதிவுசெய்யப்பட்ட ஒரு சங்கமாக உருவாக்கப்பட்டது. மின் ஆளுமை துறையின் இயக்குநர் அலுவலால் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் முதன்மை செயல் அலுவலராகச் செயல்படுகிறார்.

## 2. நிருவாக அமைப்பு

### 2.1 மின்ஆளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை

அரசாணை (நிலை) எண்.10, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் (பி.1) துறை, நாள் 10.03.2023 மூலமாக மின்னாளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மறுகட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது.

மின் ஆளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை ஆகியவை அயற்பணியிலான அரசு அலுவலர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்

துறையின் மூத்த தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட குழுவால் வழிநடத்தப்படுகின்றது.

மின் ஆளுமை இயக்குநரகத்திற்கு 61 தொழில்நுட்பப் பணியிடங்களும், 16 தொழில்நுட்பம் சாரா பணியிடங்களும், மேலும், தமிழ்நாடு மின்ஆளுமை முகமைக்கு 188 தொழில்நுட்பப் பணியிடங்களும், 13 தொழில்நுட்பம் சாரா பணியிடங்களும் மறுகட்டமைப்பிற்குப் பின் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த பணியிடங்கள் அனைத்திற்கும் 31.12.2026 வரை ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**2.2 மாவட்ட மின் ஆளுமை சங்கங்கள்**

மின்–மாவட்டத் (e–District) திட்டம், தேசிய மின் ஆளுமை திட்டத்தின் (NeGP) கீழ் செயல்படுத்தப்படும் மாநிலத்தின் ஒரு குறிக்கோள் திட்டமாகும். மாவட்ட அளவில் பொது மக்களுக்கு அதிக அளவில் வழங்கப்படும் சேவைகளை மின்னணு முறையில் வழங்குவதே

இத்திட்டத்தின் நோக்கமாகும். எனவே இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மின் ஆளுமை சங்கங்கள் உருவாக்கிட அரசு ஆணையிட்டுள்ளது. இச்சங்கங்கள் சென்னை தவிர்த்த பிற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படுகிறது. சென்னை மாவட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அதன் தலைவராக செயல்படுகிறார். மாவட்ட இ–சேவை மையச் செயல்பாடுகளிலிருந்து கிடைக்கும் வருவாயில் 5 சதவிகிதம் இச்சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. 01.03.2023 முதல் இந்த வருவாய் பகிர்வானது 10 சதவிகிதமாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

### 3. டிஜிட்டல் தமிழ்நாடு (DiTN)

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசுத்துறைகளும் தங்கள் சேவைகள் மற்றும்

செயல்பாடுகளை டிஜிட்டல் முறையில் மாற்றியமைக்கச் செய்வதே டிஜிட்டல் தமிழ்நாடு (DiTN) திட்டத்தின் நோக்கமாகும். இது மக்களுக்கு வெளிப்படையான மற்றும் அவர்களை மையப்படுத்திய ஆளுமைக்கான பாதையை உருவாக்கும்.

### 3.1 பொதுமக்களுக்கான அரசு சேவைகள்

#### அ) பொது சேவை (இ–சேவை) மையங்கள்

பொதுமக்களுக்கான அரசின் சேவைகள், மின்னணு முறையில் அரசு இ–சேவை மையங்கள் வாயிலாக பொதுமக்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே வழங்கப்பட்டு வருகிறது. இந்த இ–சேவை மையங்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தனியார் மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக்கடன் சங்கங்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மீன்வளம் மற்றும் மீனவர்

நலத்துறை, கிராமப்புற தொழில் முனைவோர், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் படையினர் நகரம் (கண்டோன்மெண்ட் போர்டு) வாயிலாக அமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் அவர்களின் இருப்பிடத்தின் அருகாமையிலேயே வழங்கப்பட்டு வருகின்றன.

17.03.2023 அன்று வரை, தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 9,455 இ–சேவை மையங்கள் பல்வேறு சேவை முகவர்கள் வாயிலாக அமைக்கப்பட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் 9,720 இ–சேவை பயனர் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1: அரசு இ–சேவை மையங்களை நடத்தும் முகமைகளின் பட்டியல் (20.03.2023 அன்றுள்ளவாறு)**

| வ. எண் | சேவை முகவர்கள் | மையங்களின் எண்ணிக்கை | இ–சேவை முகப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | மகளிர் திட்டம் – தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் | 1,987 | 2,004 |
| 2. | தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் | 3,406 | 3,412 |
| 3. | தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் | 506 | 748 |
| 4. | தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தனியார் மையங்கள் | 1,578 | 1,578 |
| 5. | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை | 67 | 67 |
| 6. | கிராமப்புற தொழில் முனைவோர் | 1,674 | 1,674 |
| 7. | படையினர் நகரம் (கண்டோன்மெண்ட் போர்டு) | 3 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 8. | சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் | 234 | 234 |
| **மொத்தம்** | | **9,455** | **9,720** |

**ஆ) மக்கள் வலைதளம்**

கடந்த 2018–ஆம் ஆண்டில், மக்கள் வீட்டில் இருந்தும் அல்லது எங்கிருந்து வேண்டுமானாலும், அவர்களது கைபேசி மற்றும் மடிக்கணினி வாயிலாக மின்னணு சேவைகளை அணுகி, விண்ணப்பிக்க வகைசெய்திடும் மக்கள் வலைதளம் துவக்கப்பட்டது.

அதன் பிறகு, இவ்வலைதளத்தின் மூலம் செய்யப்படும் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மக்கள் வலைத்தளத்தில் கடந்த 2018–ஆம் ஆண்டில் 2 சதவீதம் மட்டுமே இ–சேவை பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், 2022–ஆம்

ஆண்டில் அது 31 சதவீதமாக உயர்ந்துள்ளது. 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட மின்னணு சேவை பரிவர்த்தனைகள், மக்கள் வலைதளம் வாயிலாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே தற்போதைய இலக்காகும்.

**அட்டவணை 2: ஆண்டு வாரியாக பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை**

| ஆண்டு வாரியாக பரிவர்த்தனை எண்ணிக்கை ஜனவரி 2016 – டிசம்பர் 2022 | | | |
|---|---|---|---|
| **ஆண்டு (ஜனவரி – டிசம்பர்)** | **இ –சேவை (CSC)** | **இ–சேவை மக்கள் வலைதளம்** | **மொத்தம்** |
| 2016 | 1,02,91,198 | – | 1,02,91,198 |
| 2017 | 1,12,62,238 | – | 1,12,62,238 |
| 2018 | 1,04,11,812 | 1,83,304 | 1,05,95,116 |
| 2019 | 97,63,563 | 9,49,460 | 1,07,13,023 |

| | | | |
|---|---|---|---|
| 2020 | 75,86,335 | 14,00,513 | 89,86,848 |
| 2021 | 1,55,64,179 | 24,82,207 | 1,80,46,386 |
| 2022 | 92,30,915 | 28,64,841 | 1,20,95,756 |
| **மொத்தம்** | **7,41,10,240** | **78,80,325** | **8,19,90,565** |

**இ) அனைவருக்கும் இ-சேவை**

இ-சேவை மையங்களை எளிதாக அமைத்திட ஏதுவாக, "அனைவருக்கும் இ-சேவை" என்ற திட்டம் 15.03.2023 அன்று துவக்கப்பட்டது. இத்திட்டம் தொழில்முனைவோர்கள் ஒவ்வொரு கிராமங்கள், வார்டுகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் இ-சேவை மையங்களை அமைத்திட வழிவகுக்கும். தகுதி வாய்ந்த அனைத்து மக்களும் சில அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தபின், இணைய வழி மூலம் விண்ணப்பித்து இ-சேவை மையங்களைத் துவங்கலாம்.

18004256000 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணின் மூலம் இ-சேவை மையங்கள் மற்றும் சேவைகள் குறித்து, ஆப்பரேட்டர்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து கருத்துகள் மற்றும் புகார்களை சேகரிக்க, ஒப்புகை மற்றும் கருத்து பெறும் அமைப்பு ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு மைய அமைப்பின் மூலம் கருத்துகளைப் பெற்று குறைகளைத் தீர்க்க உதவும்.

**4. டிஜிட்டல் மயமாக்கப்பட்ட அலுவலகம் – தமிழ்நாடு– மின் அலுவலகம்**

மின்அலுவலகப் பயன்பாட்டுத் தொகுப்பு என்பது அரசு அலுவலகங்களில் உள்ள வழக்கமான பணிகளைத் தானியங்கிமயமாக்கும் பயன்பாட்டு தொகுப்பாகும். அரசின் கோப்புகளைக் கையாளும் ஒவ்வொரு பணியாளருக்கும் ஒரு தனித்துவமான பெயர் அடிப்படையிலான பயனர் குறியீடு

வழங்கப்பட்டு, அதன் மூலம் அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பொருண்மைகள் தொடர்பான கோப்புகளைக் கையாள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு துறையும் ஒற்றை அலகாக கட்டமைக்கப்பட்டுள்ளதால், அதன் கீழ் உள்ள அலுவலகங்களின் கோப்புகளின் நிலுவையைத் துறைத் தலைவரால் எளிதில் கண்காணிக்க முடியும்.

தமிழ்நாடு அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து அலுவலகங்களையும் மின்மயமாக்கும் திட்டத்தை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை முன்னெடுத்துச் செல்கிறது. முதல் கட்டமாக, 07.03.2022 அன்று தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளிலும், 3,645 பயனர்களை உள்ளடக்கி மின்–அலுவலகத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இரண்டாம் கட்டமாக 30.06.2022 அன்று அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் அதன் கீழ் உள்ள

அலுவலகங்களில் 23,303 பயனர்களை உள்ளடக்கி மின்–அலுவலத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மூன்றாம் கட்டமாக, இதுவரை 44 துறைத் தலைமையகங்களில், 15,104 பயனர்களுடன் கூடிய மின் அலுவலகப் பயன்பாட்டுத் தொகுப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது. நாளதுவரை, மின் அலுவலகத் திட்டம் செயல்படுத்தப்பட்ட அலுவலகங்களில், 14,38,067 மின்–கோப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன, இது ஆளுமையை மேம்படுத்துவதில் மின்–அலுவலகப் பயன்பாட்டின் செயல்திறனை நிரூபிக்கிறது.

மின்னணுக்கோப்பு மேலாண்மை அமைப்பு, காகிதமில்லா அலுவலகத்தை உருவாக்கவும், கோப்புகளின் மீது விரைவாக நடவடிக்கை எடுக்கவும், நிருவாகத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. அலுவலகத்திற்குள்ளும் மற்றும் அதன் சார்பு அலுவலகங்களுக்கிடையேயும் நடைபெறும் தகவல்

பரிமாற்றங்கள் நிகழ்நேர வேகத்தில் நடைபெறுவதால் கோப்புகள் மீதான முடிவுகள் மேற்கொள்ளும் திறனை மேம்படுத்தி உள்ளது. மின் அலுவலகத் திட்டம் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதன் மூலம் கோப்புகளைக் கண்காணித்திடவும், அவற்றின் நிலையினை எல்லோரும் எல்லா நேரங்களிலும் தெரிந்து கொள்வதற்கும் வழிவகுக்கிறது. மேலும், கோப்புகள் மீதான முடிவெடுக்கும் தரம் மற்றும் வேகத்தைக் கண்காணிப்பது எளிதாக்கப்படுவதால், பொறுப்புணர்வு அதிகரிக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, இத்திட்டம், தரவுப் பாதுகாப்பு மற்றும் சீரான தரவு ஒருங்கிணைப்பினை உறுதி செய்கிறது. இத்திட்டம் ஆற்றல் மிக்க நிர்வாகத்தை நோக்கி நம் மாநிலத்தைப் பயணிக்கச் செய்வதுடன், மக்களுக்கு சேவைகளை சிறப்பாக வழங்குவதை முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.

## 5. தமிழக அரசின் கொள்கை முடிவுகளுக்கான ஆதரவு அமைப்பு – (TN Decision Support System – (DeTN))

### 5.1 தரவுத்தூய்மை

தரவு சார்ந்த முடிவுகளுக்கான ஆதரவு கட்டமைப்பானது, அரசின் திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை வடிவமைத்தல், மேம்பாடு மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றில் உதவுவதற்காகவும் நிருவாகத்தை மேம்படுத்தவும் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் (இ1) துறையின் 23.09.2021 நாளிட்ட அரசாணை எண்.17–ன் மூலம், தரவுத்தூய்மைத் திட்டத்தை மேற்கொள்வதற்கான முதன்மை நிறுவனமாக தமிழ்நாடு மின்ஆளுமை முகமை (TNeGA) நியமிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது அரசுத் துறைகளின் மின்னணுத் தரவுகளை ஒருமுறை சேகரிக்கிறது, அதன்பிறகு, அத்தரவுகளில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்கள்,

இடைமுகச் செயல் நிரலி (Application Program Interface) மூலம் தமிழ்நாடு மின்ஆளுமை முகமையால் துறைகளிடமிருந்து பெறப்படுகின்றது. தரவுத் தூய்மைத் திட்டம், சரியான பயனாளிகளைக் கண்டறியவும், தகுதியற்றவர்களைக் களையெடுக்கவும், இறந்தவர்களின் தரவுகளைப் பயனாளிகளின் பட்டியலில் இருந்து நீக்கவும், தகுதியுள்ளப் பயனாளிகளைக் கொண்டதொரு தரவுத்தளத்தை உருவாக்கவும், அரசாங்கத்திற்கு முடிவெடுக்கும் ஆதரவு அமைப்பாகச் செயல்படுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், தனித்த தரவுகள் எனும் நிலையை மாற்றி, துறைகளுக்கிடையே தரவு பகிர்தலை ஏற்படுத்துகிறது.

தகுதியில்லாத பயனாளிகளைக் களையெடுத்ததன் மூலம் நகைக்கடன் தள்ளுபடி திட்டம் மற்றும் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி திட்டம் ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான கோடி

அளவிற்கு அரசின் நிதியானது சேமிக்கப்பட்டது. அமைப்பு சாரா தொழிலாளர்கள் மற்றும் குடும்ப அட்டை இல்லாத மாற்றுத் திறனாளிகள் கண்டறியப்பட்டு, புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்கான முடிவுகள் பகிரப்படுகிறது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டஅட்டைகள் இல்லாத வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் ஆய்வுசெய்யப்பட்டு, புதிய CMCHIS அட்டைகளை வழங்க சுகாதாரத்துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 5.2 முதலமைச்சரின் தகவல் பலகை

முதலமைச்சரின் தகவல் பலகை 23.12.2021 அன்று தொடங்கப்பட்ட ஒரு உள் ஆளுகைக்கான கருவியாகும். மேலும், இது தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் உள்ள வணிக நுண்ணறிவு உருவாக்குபவர், பணி ஆய்வாளர் மற்றும் ஒருங்கிணைப்பு தரவு ஆய்வாளர் ஆகியோரைக்

கொண்ட குழுவால் வடிவமைக்கப்பட்டது. நிகழ்நேர தகவல் அல்லது கள மட்டத்திலிருந்து அவ்வப்போது சேகரிக்கப்படும் தரவுகளைக் கொண்டு தினசரி, மாதாந்திரம் மற்றும் ஆண்டு அடிப்படையில் புதுப்பிக்கப்பட்ட தகவலை வழங்குவதே இத்தகவல் பலகையின் நோக்கமாகும்.

இத்தகவல் பலகைகள் தொடங்கப்பட்டதிலிருந்து, பல்வேறு துறைகள், திட்டங்கள், காவல்துறை முயற்சிகள் மற்றும் ஒட்டுமொத்த நிருவாகத்தின் செயல்திறனைக் கண்காணிப்பதில் இன்றியமையாத அங்கமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தகவல் தளமாக முதலில் வடிவமைக்கப்பட்ட இத்தகவல் பலகைகள், தற்போது ஆதாரம் சார்ந்த முடிவெடுப்பதில் பயனுள்ள ஒரு தளமாகப் பரிணமித்துள்ளது.

தகவல் பலகைகள் 32 துறைகள் மற்றும் 100–க்கும் மேற்பட்ட இயக்குனரகங்களின் தரவுகளை

உள்ளடக்கியுள்ளது. 135−க்கும் மேற்பட்ட தகவல் பலகைகள் உருவாக்கப்பட்டு, இத்தளம் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது. தகவல் பலகைக் குழுவானது தரவுகளின் நிலைத் தன்மையை கவனமாக அணுகி, தரவின் நேர்மையை உறுதி செய்கிறது.

ஒவ்வொரு தகவல் பலகையும் ஒவ்வொரு துறையின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தனித்துவமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் ஒவ்வொரு இயக்குநரகத்திலும் இறுதி செய்யப்பட்டு, ஒரு வணிகத் தேவை குறித்த ஆவணம் தொகுக்கப்பட்டுள்ளது. துறைகளில் இருந்து அனுமதி பெற்றபின், தகவல் பலகைகள் உருவாக்கப்பட்டு, தொலைபேசி எண்ணுடன் இணைந்த ஒரு முறை மட்டுமே பெறக்கூடிய கடவுச் சொல்லுடன் கூடிய பாதுகாப்புடன் கட்டுப்படுத்தப்பட்ட அணுகல் வழங்கப்படுகிறது. தகவல் பலகைகளில் இருந்து

எடுக்கப்பட்ட கால மற்றும் மாதாந்திர அளவிலான அனுமானங்கள், பகுப்பாய்வுக் குறிப்புகள் வடிவில் அந்தந்த துறைகளுடன் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

தகவல் பலகைகளை செயல்படுத்தும் போது, பல இயக்குநரகங்கள் மற்றும் துறைகளில் இணையவழியல்லாத செயல்முறைகள் மற்றும் சிரமமான, தேவையற்ற நடைமுறைகள் ஆகியவற்றால் ஏற்படும் திறமையின்மை கண்டறியப்பட்டது. இதை நிவர்த்தி செய்திடும் வகையில், ஒவ்வொரு செயல்முறையையும் மதிப்பீட்டுப் பகுப்பாய்வு செய்து, அவற்றை கண்காணிக்கவும், செயல்முறையை எளிதாக்கவும், பயனுள்ள மற்றும் தேவைப்படும் மாற்றங்களை முன்மொழியவும் ஒரு குழு உருவாக்கப்பட்டது. மேலும் அச்செயல்முறைகளின் பின்னணி குறித்த வரலாறு, செயலோட்ட வரைபடங்கள் (Flow Chart)

வழியாக அவற்றின் தற்போதைய பொருத்தத்திற்காக ஆராயப்படுகிறது.

ஒட்டுமொத்தமாக, முதலமைச்சரின் தகவல் பலகையானது தமிழ்நாட்டின் நிருவாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் தரவு சார்ந்த முடிவெடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. தகவல் பலகைகளின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு காலமுறை ஆய்வுக் கூட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டு, அவரது வழிகாட்டுதல்கள் அவ்வப்போது பெறப்படுகின்றன. அரசுத்துறைச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அவற்றின் தேக்கநிலையை சரிசெய்திட, தகவல் பலகைகளை அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். இடைமுக நிரலியை (API) பயன்படுத்தி துறைகளின் இணையதளத் தரவுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதால் இத்தகவல்

பலகைகளின் செயல்திறன் மற்றும் ஆற்றல் மேம்படுத்தப்பட்டு, நல்ல நிருவாகத்தை வழங்க வழிவகை செய்கிறது.

## 6. தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் முக்கிய திட்டங்கள்

### 6.1 மாநில குடும்ப தரவுதளம் (SFDB)

மாநில குடும்ப தரவுதளமானது (SFDB) அரசின் திட்டங்களைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல் ஆகியவற்றிற்கு உதவுவதன் மூலம், நிருவாகத்தை மேம்படுத்துவதற்கான தரவு சார்ந்த முடிவுகளுக்கான ஆதரவு உட்கட்டமைப்பாக விளங்கும். மக்களுக்கு வெளிப்படையான மற்றும் தடையற்ற சேவை வழங்கலை உறுதி செய்வதற்காக பல்வேறு துறைகளுக்கு இடையே தரவு ஒத்திசைவை செயல்படுத்துவதன் மூலம் தற்போதுள்ள துறையின் உட்கட்டமைப்பை இது வலுவாக்குகிறது. தமிழ்நாடு அரசின் ஒவ்வொரு துறைக்கும் அவற்றின் தனித்த

செயலிகள் மற்றும் தொடர்புடைய தரவுதளங்கள் உள்ளன. அத்தரவுதளங்கள் அனைத்தும் SFDB–ன் மைய தரவுதளத்தை உருவாக்கப் பயன்படுத்தப்படும். மேலும், இது மாநிலம் முழுவதும் உள்ள பயனாளிகளைத் தனித்துவமாக அடையாளம் காணப் பயன்படுகிறது. இது அரசின் சலுகைகள் மற்றும் சேவைகளை மக்களுக்கு விரைவாகவும் முனைப்புடனும் வழங்கிட வழிவகை செய்யும்.

மக்கள் வலைதளம் மற்றும் பின் அலுவலக வலைதளம் (Backoffice) ஆகியவை படிப்படியாக வெளியிடப்படும்.

**6.2 தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு** (TNGIS)

புவிசார் தகவல் அமைப்பு (GIS) என்பது இடம்சார்ந்த மற்றும் இடம்சாரா தரவுகளை இணைப்பதன் மூலம் மேலாண்மை, பகுப்பாய்வு மற்றும் முடிவெடுப்பதற்கான ஒரு கருவியாகத் திகழ்கிறது. தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS) மாநிலத்திற்கான பொதுவான புவிசார் தகவல்

அமைப்பு தளத்தை உருவாக்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்டது, இதில் அனைத்துத் துறை சார்ந்த சொத்துக்கள், பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் வசதிகள், திட்டங்கள் (நிலத்தடி தரவு உட்பட செயற்கைக்கோள்கள், ஆளில்லா விமானங்கள், வான்வழி மற்றும் நிலப்பரப்பு தளங்களிலிருந்து தொலைதூர உணர்தல் தரவு) ஆகிய புவிசார் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இடம்சார்ந்த தரவுத்தொகுப்பாக காட்சிப்படுத்தப்படுகிறது. அனைத்து துறைகளின் தடையற்ற இடம்சார்ந்த தரவுத்தொகுப்புகள் மற்றும் தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு மூலம் அவற்றின் ஒருங்கிணைந்த மேலாண்மை தகவல் அமைப்பு தரவுகள் துறைகளுக்கிடையே பகிரப்பட்டு, மாநிலத்தில் ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைக்கு பயன்படுத்தப்படும்.

தற்போது, தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு பல்வேறு துறைகளில் இருந்து தொகுக்கப்பட்ட 300 இடம்சார்ந்த தரவு அடுக்குகளை நிர்வகித்து வருகிறது. அவை தேவைப்படும் துறைகளுடன் பகிர்ந்துக் கொள்ளப்பட்டன. கடந்த ஆண்டில் சுமார் 70 அடுக்கு தரவுகள் சுமார் 20 துறைகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற தரவுகள் தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு இணையதளம் https://tngis.tn.gov.in–இல் உள்ளீடு செய்யப்படுகிறது. இதன் அடிப்படையில் துறை சார்ந்த செயலிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**2022–இல் முடிக்கப்பட்ட செயல்பாடுகளின் முக்கிய சிறப்பம்சங்கள்:**

அ) உயர் மதிப்புடைய உள்கட்டமைப்பு திட்டங்களின் உண்மைநிலை மற்றும் நிதி முன்னேற்றத்தைக் கண்காணிக்க இ–முன்னேற்றம் செயலி பயன்படுகிறது.

ஆ) ஊரக வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைகளின் உதவியுடன் நிருவாக எல்லைகளை உருவாக்குதல்.

இ) தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு, 10 துறைகளுடன் ஒருங்கிணைந்த 29 இடம்சார்ந்த அடுக்குகளை பிரதம மந்திரி கதிசக்தி இணைய தளத்துடன் பகிர்ந்துள்ளது.

ஈ) ஊரக வளர்ச்சி, கலால் துறை, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், நெடுஞ்சாலைகள் துறை போன்றவற்றுக்கான செயலிகளை உருவாக்குதல்.

**2023–ஆம் ஆண்டில், தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பின் கீழ் பின்வரும் நடவடிக்கைகளை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன:**

அ) கூடுதல் வசதிகளுடன் ஏற்கனவே உள்ள இணையதளத்தை மறுசீரமைத்து. அனைத்து வகையான இடம்சார்ந்த பகுப்பாய்வைச் செய்வதற்கும், இடைமுக நிரலிகள் மூலம் தரவை பகிர்வதற்கும் மற்றும் குறிப்பிட்ட

ஆய்வுபொருள் கொண்ட தகவல் பலகைகளை உருவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ) ஒவ்வொரு பருவத்திலும் விளையும் அனைத்து பயிர் குறித்த தகவல்களையும் புவிசார் சரிபார்ப்புடன் பதிவு செய்ய கைபேசி /இணைய செயலியை உருவாக்குதல். இத்தரவு, அடங்கல் தரவுத்தளத்தைப் புதுப்பிப்பதற்கும், திட்டமிடல் மற்றும் கொள்கை வகுப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய புள்ளிவிவரங்களை தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படும்.

இ) சொத்துக்களின் நிலஅளவை எண், தற்போதைய இடம், அருகிலுள்ள வசதிகள் / அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வரும் சேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் சொத்து விவரங்களைப் பெறுவதற்கான செயலியை உருவாக்குதல்.

ஈ) திட்டமிடல் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைக்கான அனைத்து அரசாங்க

சொத்துக்கள் மற்றும் வசதிகளை வரைபடமாக்குவதற்கான கைபேசி செயலியை உருவாக்குதல்.

உ) அனைத்து உட்கட்டமைப்பு தொடர்பான திட்டப் பணிகளின் உண்மை நிலை மற்றும் நிதி முன்னேற்றத்தைக் கண்காணிக்க புவிசார் தகவல் அமைப்பு அடிப்படையிலான திட்ட மேலாண்மைப் பயன்பாட்டை உருவாக்குதல்,

அனைத்து பயனர் துறைகளுடனும் கலந்தாலோசித்து, அனைத்து இடம்சார்ந்த தரவு அடுக்குகளுக்கான தரநிலைகளை தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு தயாரித்து வெளியிடும். அனைத்து இடம்சார்ந்த தரவு உள்ளடக்கங்களுக்கான தரவு பகிர்வு / பரிமாற்றக் கொள்கையின் அடிப்படையில், தமிழ்நாட்டின் புவியியல் கொள்கை தயாரிக்கப்படும். தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்புக் குழு பல்வேறு

துறைகளின் புவிசார் தகவல் குறித்த தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில் வலுப்படுத்தப்படும்.

### 6.3 உங்கள் அரசை அறிந்து கொள்ளுங்கள் இணையதளம் (KYG Website)

டிஜிட்டல் உலகின் சகாப்தத்தில், ஒரு அரசைப் பற்றியும் அதன் செயல்பாடுகளைப் பற்றியும் தெரிந்துகொள்ளும் முதன்மை தளமாக இணையதளம் உள்ளது. அதன் முதற்படியாக, தமிழ்நாடு அரசின் இணையதளமான tn.gov.in மறுவடிவமைப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் முதல் கட்டமாக, தற்போதுள்ள மாநில இணையதளத்தை உலகத்தரம் வாய்ந்த வடிவமைப்புடனும், பயனர்கள் எளிய முறையில் அணுகும் வகையிலும், மாற்றுத் திறனாளிகளும் பயன்படுத்தும் வகையிலும் மறுவடிவமைப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் குறித்த தகவல்களை பரப்பும் ஊடகமாக இந்த இணையதளம் செயல்படும்.

இதன் முதற்கட்டமாக, செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான திறன்மிகு உரையாடல் (CHATBOT) வசதியை இத்தளம் கொண்டிருக்கும். இந்த திறன்மிகு உரையாடல் மூலம், அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகளின் விவரங்களை பொதுமக்கள் கண்டறியலாம். வாக்கெடுப்புகள், போட்டிகள், பிரச்சாரம் மற்றும் பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களுடன் திறம்பட இணைந்து ஈடுபடுவதற்கான அம்சங்களை இந்த இணையதளம் கொண்டிருக்கும். பல்வேறு அரசுத் துறைகளால் உருவாக்கப்பட்ட மக்களுக்கான சேவைகள் வழங்கும் செயலிகளுக்கான தரவிறக்கம் செய்யக்கூடிய இணைப்பை இயக்குவதற்கான ஒரு ஒற்றைத் தளமாகவும் இந்த இணையதளம் விளங்கும்.

இரண்டாம் கட்டமாக, தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைமையகங்கள் மற்றும் முகமைகள் மறுசீரமைப்புக்கு எடுத்துக் கொள்ளப்படும். தற்போது அரசுத் துறைகள், துறைத்

தலைமை அலுவலகங்கள் மற்றும் அரசு முகமைகளின் இணையதளங்கள் பல்வேறு மென்பொருள் உருவாக்குனர்களைக் கொண்டு நிருவகிக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் இத்தளங்கள் அரசின் KYG இணையதளக் குழுவால் நிருவகிக்கப்படும்.

இத்திட்டம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் உள்ள குழுவால் வடிவமைக்கப்பட்டு, தலைமைச் செயலகத்தில் உள்ள தேசிய தகவலியல் மையம் மூலம் செயல்படுத்தப்படும்.

**6.4 செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் (AI/ML)**

பிரச்சனைகளை புதிய முறையில் அணுகிடவும், பொதுமக்களின் வாழ்வை அர்த்தமுள்ள முறையில் மேம்படுத்திடவும், செயற்கை நுண்ணறிவு / இயந்திரக் கற்றல் உதவும். அனைத்து துறைகளிலும் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சி ஏற்படுத்தும் வகையில் சுகாதாரம், விவசாயம், எரிசக்தி மற்றும்

கல்வி போன்ற துறைகளில் செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்துவதில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை கவனம் செலுத்தி வருகிறது.

தற்போது முக்கியத்துவம் அளிக்கப்படுபவை :

1. நம்பகமான மற்றும் அணுகக்கூடிய தரவு
2. கணினிப் பார்வை
3. குரல் அடிப்படையிலான செயற்கை நுண்ணறிவு மற்றும் திறன் உரையாடல்
4. பயன்பாட்டுத் தரவு அறிவியல்
5. புவியிடம் சார்ந்த பகுப்பாய்வு

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, அனைத்து அரசுத்துறைகளுடன் ஒன்றிணைந்து மேற்கூறிய பகுதிகளில் கவனம் செலுத்தி வருகிறது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் நிறைவு செய்யப்பட்டு, மக்கள் மற்றும் துறைகளின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சில செயற்கை நுண்ணறிவு திட்டங்கள் பின்வருமாறு:

**அ) இ–பார்வை**

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கண்புரை கண்டறிதல் கைபேசி செயலி மாநிலம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 20,000 கண்புரை நோயாளிகள் கண்டறியப்பட்டு, மேல்ஆலோசனை மற்றும் அறுவை சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

**ஆ) முக அங்கீகார அடிப்படையிலான வருகை அமைப்பு 2.0 (FRAS 2.0)**

முக அங்கீகார அடிப்படையிலான வருகைப்பதிவு அமைப்பு 2.0ஆன்ட்ராய்டு செயலியாக உருவாக்கப்பட்டு மாநிலம் முழுவதும் செயலாக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது . இந்த செயலியின் மூலம் களப்பணியாளர்கள் தத்தம் பணியிடங்களிலிருந்து தங்களது வருகையை பதிவு செய்வதன் மூலம் அவர்களின் வருகை அவர்களின்

புவிஇருப்பிட தகவலுடன் குறிக்கப்படுகிறது. தற்போது, பொது சுகாதார இயக்குநரகத்திலுள்ள 1000 முன்கள சுகாதார பணியாளர்களைக் கொண்டு, சோதனை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் நிறைவில், 35,000 முன்கள சுகாதாரப் பணியாளர்களுக்கு இச்செயலி விரிவுபடுத்தப்படும். விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவை தங்கள் ஊழியர்களுக்கு இச்செயலியை பயன்படுத்த ஆர்வம் காட்டியுள்ளன.

### இ) செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பூச்சி மற்றும் நோய் கண்டறிதல்

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பூச்சி மற்றும் நோய் கண்டறிவதற்கான உழவன் கைபேசி செயலி உருவாக்கப்பட்டு, அதை தமிழ்நாட்டின் விவசாயிகள் ஏற்கனவே பயன்படுத்தி வருகிறார்கள். இச்செயலி மூலம் வேளாண்மை

மற்றும் உழவர் நலத்துறையின் நிபுணர் ஆலோசனையை விவசாயிகள் பெற்று வருகின்றனர்.

ஈ). **நிதிப் பகுப்பாய்வுக் கருவி**

நிதித் துறைக்காக உருவாக்கப்பட்ட நிதிப் பகுப்பாய்வுக் கருவிக்கான கருத்து ஆதாரம், கடன் மேலாண்மையை கவனத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

## 6.5 தமிழ்நாடு நம்பிக்கை இணையக் கட்டமைப்பு – நம்பிக்கை இணையம்

நம்பிக்கை இணையக் கட்டமைப்புத் திட்டமானது தமிழ்நாடு அரசுத் துறைகளுக்கு அரசாங்க தரவு மற்றும் ஆவணங்களைப் பாதுகாக்கவும், டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சொத்துக்களின் ஆதாரங்களைக் கண்காணிக்கவும் ஒரு ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பை பயன்படுத்த உதவும். இத்தளம் பல்வேறு மின்–ஆளுமைச் செயலிகளை உருவாக்க பயன்படுத்தப்படும். தற்போது இந்த இணையம், நிலப் பதிவுகளைப் பாதுகாத்தல்,

கல்வி மற்றும் மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் இ–சேவை சான்றிதழ்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் செயல்பாட்டிற்கு வந்தவுடன், நிறுவனங்கள், அலுவலர்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியோர் அரசால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள், மதிப்பெண் சான்றிதழ்கள், ரசீதுகள் மற்றும் உரிமங்களை பாதுகாப்பாக சரிபார்க்க இயலும். கூடுதலாக, தமிழ்நாட்டின் தற்போதைய மற்றும் முந்தைய காலகட்ட நில பதிவுகள் அனைத்தும் இத்தளத்தில் பாதுகாக்கப்படும்.

**7. தமிழ்நாடு அரசுத் துறைகளுக்கான திட்டங்கள்**

தமிழ்நாடு அரசுத் துறைகளுக்கான மென்பொருள் தொடர்பான பணிகளுக்கான விருப்பக் கொள்முதல் நிறுவனமாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நியமிக்கப்பட்டுள்ளது. இம்முகமை, தமிழ்நாடு அரசின் நிறுவனங்களுக்கு ஆலோசனை

சேவைகள் மற்றும் திட்ட மேலாண்மை சேவைகளை வழங்கி வருகிறது. இம்முகமை, அரசுத் துறைகளுக்கு தேவை அடிப்படையில் இணையதளம், இணைய செயலிகள், கைபேசி செயலிகள், செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் செயலிகள், தரவுப் பொறியியல் போன்றவற்றை வடிவமைத்தல், உருவாக்குதல், பராமரித்தல் மற்றும் இயக்குதல் ஆகியவற்றை உறுதி செய்கிறது.

இம்முகமை திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்திடவும், தமிழ்நாட்டு மக்களுக்கான பொது சேவைகளை வழங்கிடவும் தகவல் தொழில்நுட்பத்தின் ஆற்றலைப் பயன்படுத்துவற்கான கருவியாக உள்ளது. இம்முகமை முதல்வரின் முகவரி, புதுமை பெண், சட்டமன்ற செயலக பதிவுகளை டிஜிட்டல் மயமாக்கல், "ஊட்டச்சத்தை உறுதிசெய்தல்" மற்றும் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் போன்ற அரசின் முதன்மை திட்டங்களை செயல்படுத்தவும், கண்காணிக்கவும்,

தொடர்புடைய அரசுத் துறைகளுக்கு உதவிகரமாக உள்ளது.

இந்த அமைப்பு, நிதி, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், வணிக வரிகள், பெருநகர சென்னை மாநகர காவல்துறை, வனத்துறை, மாற்றுத் திறனாளிகள் நலன், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, திட்டம் மற்றும் வளர்ச்சி உள்ளிட்ட அனைத்து துறைகளுக்கும் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளை வழங்கி வருகிறது.

2022-23-ஆம் ஆண்டில், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, பிற துறைகள் தங்கள் பழைய கோப்புகளை டிஜிட்டல் மயமாக்கல், டிஜிட்டல் முறையில் சேவைகளை வழங்குவதற்கான செயலிகளை உருவாக்குதல், வலைதளங்கள் உருவாக்குதல், தரவு சேகரிப்பு செயலிகள், திட்ட கண்காணிப்பு செயலிகள், சொத்து மேலாண்மை செயலிகள், திட்ட மேலாண்மை மற்றும் கண்காணிப்பு செயலிகள், முழு அளவிலான நிறுவன வள

திட்டமிடல் செயலிகள், ஆட்சேர்ப்பு தீர்வைகள், நிதி ஆதாரத் தளங்கள், மின்–கற்றல் தளங்கள், மின்னணு வணிக செயலிகள் ஆகியவற்றின் உருவாக்கத்திற்கு உறுதுணையாக உள்ளது.

## 7.1 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம் – புதுமைப்பெண் திட்டம்

தமிழ்நாடு அரசு, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம் (MRAHEAS) – புதுமைப்பெண் திட்டத்தினை தொடங்கி செயல்படுத்தி வருகிறது, இத்திட்டம் அரசுப் பள்ளிகளில் இருந்து உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் பெண்களின் சேர்க்கை விகிதத்தை மேம்படுத்தும் தனித்துவமான திட்டமாக விளங்குகிறது. இத்திட்டத்தின் மூலம், தகுதியுள்ள அனைத்து மாணவிகளுக்கும் இளங்கலைப் பட்டம்/பட்டயம்/தொழிற்கல்விப் பயிற்சி/ வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட படிப்பை முடிக்கும் வரை ஒவ்வொரு மாதமும் ரூ.1000/– நிதியுதவியாக

வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஊக்கத் தொகை, நேரடியாக மாணவிகளின் வங்கிக் கணக்கில் நேரடிப் பயன் பரிமாற்றம் (DBT) வாயிலாக செலுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள முக்கிய அம்சமானது, பயனாளிகளை பதிவு செய்தல், தகுதியான மாணவிகளுக்கு ஒப்புதல் அளித்தல், பணம் செலுத்துதல் ஆகியவை இணையதளம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு தடையின்றி செயல்படுத்தப்பட்டு வருவதாகும். இருமுறை பதிவு மற்றும் தவறான பதிவுகளைத் தவிர்ப்பதற்காக உயர்கல்வி நிறுவனங்களால் மட்டுமே விண்ணப்ப பதிவு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திட்டத்தின் புதுமைகள்**

- ❖ மாணவிகளின் அடிப்படை சுயவிவரங்கள் கல்வி மேலாண்மை தகவல் அமைப்பிலிருந்து (EMIS) பெறப்படுகின்றன.

இது கைமுறை மற்றும் தவறான தரவு உள்ளீட்டைத் தவிர்க்கிறது.

- ❖ மாணவிகளின் முன்னரே சரிபார்க்கப்பட்ட தரவுகள்/ பள்ளிக் கல்வித் துறையிலிருந்து தரவுத்தளமாக பெறப்பட்டு, விண்ணப்பத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டுள்ளது. இது மாணவிகள் வங்கிக் கணக்கினை செயலில் வைத்திருக்கும் பட்சத்தில், விண்ணப்பத்தை தானாக அங்கீகரிக்கும் வாய்ப்பை வழங்குகிறது.
- ❖ இத்திட்டம் ஆதார் அடிப்படையிலான e-KYC பயன்பாட்டின் மூலமாக மாணவிகளின் பெயர், பிறந்த தேதி, பாலினம், முகவரி மற்றும் ஆதார் அட்டையிலிருந்து புகைப்படம் போன்ற அடிப்படை விவரங்களை சரிபார்க்க உயர்கல்வி நிறுவனங்களுக்கு உதவுகிறது.

- ❖ இந்திய தேசிய பணம் செலுத்துகை நிறுவனத்தின் (NPCI) வரைபடமாக்கியுடன் கூடிய பயன்பாட்டு நிரலாக்க இடைமுக நிரலி (Application Programming Interface (API)) ஒருங்கிணைப்பு மூலம் மாணவிகளுக்கான செயலில் உள்ள வங்கியின் இருப்பு உறுதி செய்யப்படுகிறது. இது மாணவிகளுக்கு உதவித்தொகையினை ஆதார் எண்ணை அடிப்படையாகக் கொண்ட நேரடி பயன் பரிமாற்றம் (DBT) மூலம் நேரடியாக வங்கி கணக்கில் பெறுவதை உறுதிசெய்ய உதவுகிறது.

**<u>திட்டத்தின் தாக்கம்</u>**

- ❖ பெரும்பாலான தரவுகள் பல்வேறு தரவுதளங்களிலிருந்து பெறப்படுவதால், இந்த பயன்பாடு விண்ணப்பத்தை நிரப்பும் நேரத்தை வெகுவாகக் குறைத்துள்ளது.

- தானியங்கி ஒப்புதல் வழங்குவது, விண்ணப்ப செயல்முறையை உடனடியாக முடிக்க உதவுகிறது.
- இத்திட்டத்தின் அறிவிப்புக்குப் பிறகு மாநிலம் முழுவதும் மாணவிகளின் சேர்க்கை எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்துள்ளது.
- நாளது தேதியின்படி, பள்ளிக் கல்வியை முடித்து 2 முதல் 8 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு சுமார் 14,758 மாணவிகள் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ளனர்.
- உயர்கல்வியைத் தொடராத மாணவிகளை (பள்ளிக் கல்விக்குப் பிறகு இடைநிற்றல்) கண்டறிந்து, அவர்களை உயர்கல்வியின் கீழ் கொண்டு வர, பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வித் துறைகளுக்கு இந்த இணையதளம் உதவுகிறது.

❖ 28 பிப்ரவரி 2023 வரை, இத்திட்டத்தின் மூலம் சுமார் 2,02,824 மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

### 7.2 தமிழ்நாடு சட்டமன்றப் பதிவுகளை மின்னணுமயமாக்கல் மற்றும் மேலாண்மை செய்தல் (D.M.E.R.L.)

1921–இல் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றச் செயலகம் இந்தியாவின் மிகப்பழமையான சட்டமன்றங்களில் ஒன்றாகும். தொடக்கத்திலிருந்தே, இப்பேரவை பல சுதந்திரப் போராளிகள், திறமை மிக்கவர்கள், சிறந்த மற்றும் குறிப்பிடத்தக்க தலைவர்களை கடந்த 100 ஆண்டுகளில் கொண்டிருந்தது. இந்த சட்டமன்றச் செயலகம், சில முக்கிய சட்டங்களை இயற்றியதற்காக பெருமை பெற்றது. முக்கிய விவாதங்கள் மற்றும் அறிவிப்புகள் பதிவு செய்யப்பட்டு, சட்டமன்றத்தால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்ட விவாதப் புத்தகங்கள், பல்வேறு குழுக்களின் அறிக்கைகள், பேரவை முன்வைக்கப்பட்ட ஏடுகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த செய்தித்தாள் துணுக்குகள், படங்கள், ஒலிப்பதிவுகள், காணொளிகள் போன்ற சுமார் பத்து இலட்சம் பக்கப்பதிவுகளை, மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, மின்னணுமயமாக்கி நிருவகிப்பதை இத்திட்டம் நோக்கமாக கொண்டுள்ளது. இதன்மூலம், சட்டமன்றத்தின் பாரம்பரியமிக்க மின்னணுமயமாக்கப்பட்ட தகவல்களை இணையதளம் மூலம் மக்கள் உடனடியாக அணுகமுடியும். இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி நடைமுறை முடிவடைந்து, முதற்கட்டமாக 1921–ஆம் ஆண்டு முதல் நாளது தேதி வரையிலான விவாதப் புத்தகங்களை மின்னணுமயமாக்கும் பணியானது

16.11.2023–க்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 7.3 முதலமைச்சரின் காலை உணவு திட்ட கைபேசி செயலி

முதலமைச்சரின் காலை உணவு திட்ட கைபேசி செயலியானது, அரசுப் பள்ளிகளில் அதிக வருகை மற்றும் கற்றலை உறுதி செய்வதற்கான முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை நிருவகிப்பதற்கும், கண்காணிப்பதற்கும் உருவாக்கப்பட்டுள்ளது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள பள்ளிகளுக்கு சமையல், விநியோகம் மற்றும் காலை உணவு வழங்கப்படுவதை கண்காணிக்க ஒரு மையப்படுத்தப்பட்ட சமையலறை அடிப்படையிலான கண்காணிப்பு பகுதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பகுதியின் கீழ், சரியான நேரத்தில் எடுத்து செல்வதையும் மற்றும் விநியோகத்தையும் உறுதி செய்ய ஒரு கண்காணிப்பு அமைப்பு

செயல்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவதாக பரவலாக்கப்பட்ட பகுதி ஒன்று கிராமப்புறங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது, அதில் தொலைதூர மற்றும் மலைப்பாங்கான பகுதிகளுக்காக நேரடி தரவு சேகரிப்பு போன்ற கூடுதல் அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன. திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல், பள்ளி மேலாண்மைக் குழு, கிராமம், தொகுதி/மண்டலம், நகராட்சி/மாநகராட்சி மற்றும் மாவட்ட அளவில் உள்ள முக்கிய முடிவெடுப்பவர்கள் கண்காணிக்கும் வகையில் அனைத்து பங்குதாரர்களுக்கும் ஒரு நிகழ்நேர தகவல் பலகை கிடைக்கப்பெறும். விதிவிலக்கு கையாளுதலின் ஒரு பகுதியாக, முடிவெடுக்கும் அலுவலர்களுக்கு தினமும் காலை 11 மணிக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும்.

### 7.4 நம்ம கிராம சபைக்கான அறிக்கையிடல் செயலி

நம்ம கிராம சபைக்கான செயலியானது கிராம சபை நிகழ்ச்சி நிரல்கள், தீர்மானங்கள் ஆகியவற்றின் ஆன்லைன் அறிக்கையுடன், குறைந்தபட்ச பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையுடன் நடைபெறுகிறதா என்பதை கண்காணிக்க ஊரக வளர்ச்சித் துறைக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. செயலியில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் புவி/நேர முத்திரையிடப்பட்டு, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பங்கேற்பு முறை, தாக்கல் செய்யப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஆகியவற்றை உடனடியாக பகுப்பாய்வு செய்ய ஊரக வளர்ச்சித் துறைக்கு உதவுகிறது. ஒவ்வொரு கிராம சபைக் கூட்டத்தின் முக்கிய அம்சமாக தற்போது இந்த செயலியை ஊரக வளர்ச்சித்துறை பயன்படுத்துகிறது. வீடியோ பதிவு செய்தல், இணையத்திற்கு வெளியில் தரவுகளைச் சேகரித்தல் போன்ற அம்சங்கள்

அடுத்தடுத்த பதிப்புகளில் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளன. 12,525 கிராம பஞ்சாயத்துகள் மற்றும் 388 ஊராட்சிகளிலிருந்து வரிசைப்படுத்தப்பட்ட நிரல்கள் மூலம் தரவுகளை சேகரித்தல், ஒத்திசைவு செய்தல் மற்றும் திருத்துதல் ஆகியவற்றின் சிரமத்தை சமாளிக்க இச்செயலி உதவுகிறது.

**7.5 மற்ற துறைகளுக்கான முக்கிய திட்டங்கள்**

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, டிஜிட்டல் சேவைகள் வழங்கும் அமைப்பை வடிவமைத்து மேம்படுத்துவதற்கு, தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளை வழங்குவதில் முக்கியப் பங்காற்றி வருகிறது. பத்திரப்பதிவுத் துறையின் STAR 2.0 திட்டச் செயலாக்கம், பெருநகர சென்னை காவல் துறையின் மெகா சிட்டி திட்ட செயலாக்கம், நிதிப் பகுப்பாய்வுச் செயலி, நிதித்துறைக்கான பொதுநிதி கண்காணிப்பு அமைப்பு, சுகாதாரத் துறைக்கான

சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு (HMIS), தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கான தமிழ்நாடு ஒருங்கிணைந்த வீட்டுவசதித் தகவல் அமைப்பு, தமிழ் இணைய கல்விக் கழகத்திற்கு, தமிழ் உள்ளீடு மற்றும் மென்பொருள் மேம்பாட்டிற்கான கருவிகளை அடையாளம் காண்பதில் உதவுதல் ஆகியவை சில எடுத்துக்காட்டுகளாகும்.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், வனத்துறை, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் ஆகிய துறைகளுக்கு அவர்களின் வணிகச் செயல்முறை பணியினை முழுமையாக கணினிமயமாக்கி செயல்படுத்துவதற்கு உதவி செய்து வருகிறது. கணினிமயமாக்கல் மூலம், அரசு துறையால் வழங்கப்படும் சேவைகள் டிஜிட்டல் முறையில் இருக்கும். இது விரைவான சேவை வழங்கல் முறையை நடைமுறைபடுத்துதல் மற்றும்

துறைகள் வழங்கும் சேவையை திறம்பட கண்காணித்தல் ஆகியவற்றை செயல்படுத்த உதவுகிறது.

## 8. மற்ற துறைகளுக்கு வழங்கப்படும் தகவல் தொழில்நுட்ப சேவைகள்

### 8.1 ஆதார் ஒரு சேவையாக

தமிழ்நாட்டில் ஆதார் நிரந்தரப் பதிவு மையங்களை அமைத்து ஆதார் பதிவினை மேற்கொள்ளும் பதிவாளராக மின்ஆளுமை இயக்குநரகம்/தமிழ்நாடு மின்ஆளுமை முகமையினை இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) நியமித்துள்ளது.

பதிவாளராக உள்ள தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது, அங்கீகரிப்பு பயனர் முகமை (AUA)/ e-KYC பயனர் முகமை (KUA) சேவைகளை 12 துறைகளுக்கு "துணை அங்கீகரிப்பு பயனர் சேவைகளாக (SUB AUA/KUA)" வழங்குகிறது.

மேலும், 8 துறைகளின் துவக்கநிலை அங்கீகரிப்பு செயல்பாட்டில் உள்ளது.

பயோமெட்ரிக் முறையில் உள்ள சிக்கல்களைத் தவிர்க்க, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் "கருவிழி அங்கீகாரத்தை" தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது. அரசுப் பள்ளிகளில் இருந்து உயர்கல்வி நிறுவனங்களில் பெண் குழந்தைகளின் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்க, தமிழக அரசு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டத்தை (புதுமைப் பெண் திட்டம்) தொடங்கியுள்ளது. இத்திட்டத்தில் விண்ணப்பங்களின் ஒப்புதல் செயல்முறையை விரைவுபடுத்துவதற்காக ஆதார் எண் அடிப்படையிலான e-KYC அமைப்பை அறிமுகப்படுத்தியது. இதை செயல்படுத்தியதன் மூலம் புகைப்படத்துடன் கூடிய மாணவியின் விவரங்களை சரிபார்த்து உறுதிசெய்து கொள்ளலாம்.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV) ஆகியவை தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் கீழ் ஆதார் பதிவு முகமைகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளன. இந்த சேவை பொதுமக்களுக்கு கட்டணமின்றி வழங்கப்படுகிறது.

2022-23-க்கான ஆதார் சேர்க்கை பரிவர்த்தனைக்கான விவரங்கள் பின்வருமாறு:

| **பதிவு முகமைகள்** | **மையங்களின் எண்ணிக்கை** | **மொத்தப் பதிவுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)** | **UIDAI இணையதளம் மூலம் உருவாக்கப்பட்ட ஆதார் எண்ணிக்கை (இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் | 318 | 18.07 | 2.08 |

| | | | |
|---|---|---|---|
| தமிழ்நாடு மின்னணு நிறுவனம் | 237 | 2.43 | 2.11 |
| **மொத்தம்** | **555** | **20.50** | **4.19** |

**அட்டவணை 4: 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான ஆதார் பதிவு மற்றும் ஆதார் உருவாக்கப்பட்ட விவரங்கள்**

### 8.2 மின்னஞ்சல் ஒரு சேவையாக

மின்–ஆளுமை முயற்சியின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு அரசு, பல்வேறு அரசுத் துறைகள்/ முகமைகள்/வாரியங்கள் கீழ் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் 'tn.gov.in' என்ற களப்பெயரின் அடிப்படையிலான அலுவலர் சார்ந்த மற்றும் தனிப்பட்ட மின்னஞ்சல் குறியீடுகளை (e–Mail ID) அலுவல் சார்ந்த தொடர்புக்காக உருவாக்க முடிவு செய்யப்பட்டது. மேலும், அரசின் சில பிரிவுகளுக்கு அவற்றின் தேவைக்கேற்ப துறைசார்ந்த மின்னஞ்சல் குறியீடுகளும் உருவாக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பணியாளருக்கும் 'பதவி' சார்ந்த மின்னஞ்சல் குறியீடுகள் மற்றும் 'பெயர்' சார்ந்த மின்னஞ்சல் குறியீடுகளும் உருவாக்கப்படுகிறது. தற்போது, 2022–23–ஆம் ஆண்டில் தேசிய தகவலியல் மையத்தின் (NIC) உதவியுடன் 65,516 மின்னஞ்சல் குறியீடுகள் அரசு ஊழியர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளன.

## 8.3 குறுஞ்செய்தி ஒரு சேவையாக

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) அனைத்து அரசுத் துறைகளுக்கும் குறைந்த விலையிலும் மற்றும் பயனுள்ள வகையிலும் குறுஞ்செய்தி நுழைவாயில் சேவைகளை வழங்குகிறது. இக்குறுஞ்செய்தித் தளமானது பயன்பாட்டுத் துறைகள், தங்கள் மென்பொருள் சேவைதளத்தில் இருந்து மக்களுக்கு செய்திகளை அனுப்ப வழி செய்யும். இது தரவுகளின் முழுமையான பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிப்பதுடன், வேகம்

மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்கிறது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை தற்போது தமிழ்நாட்டிலுள்ள சுமார் 24 துறைகள்/ வாரியங்கள்/ பொதுத்துறை நிறுவனங்கள்/ முகமைகளுக்கு சேவை செய்து வருவதுடன், 2022-2023-ஆம் ஆண்டில் சுமார் 27.80 கோடி குறுஞ்செய்திகளை அனுப்பியுள்ளது.

**8.4 மின்-கையொப்ப சேவை (e-Sign as a Service)**

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் இணைய அங்கீகாரம் மற்றும் ஆதார் e-KYC சேவையைப் பயன்படுத்தி, இணையதளம் வாயிலாக ஆவணங்களில் உடனடி கையொப்பமிடுவதற்கு மின்-கையொப்ப சேவை உதவுகிறது. மின்கையொப்ப சேவை, எங்கும், எப்பொழுதும் ஆவணங்களில் டிஜிட்டல் முறையில் கையொப்பமிட எளிதான மற்றும் பாதுகாப்பான வழியை வழங்குகிறது, மின்-கையொப்ப முறையை பயன்படுத்துவதன்

மூலமாக தவறான பயன்பாடு தவிர்க்கப்படுகிறது மற்றும் இம்முறை பாதுகாப்பாக கருதப்படுகிறது. தமிழ்நாட்டின் அனைத்து அரசுத்துறைகளில் மின்–கையொப்ப சேவையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது C–DAC உடன் இணைந்து மின்–கையொப்ப சேவையை வழங்குகிறது.

மின்–கையொப்ப சேவையானது, இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் e–KYC சேவையை மேம்படுத்துவதற்காக ஒரு முறை கடவுச்சொல் (OTP) மற்றும் பயோமெட்ரிக் அடிப்படையிலான முறைகளுக்கு துணை செய்கிறது. மின்–கையொப்ப சேவையை பயன்படுத்துவது தேவையற்ற காகிதப்பணிகளை மாற்றுவதற்கான முழுமையான டிஜிட்டல் தீர்வாகிறது.

தற்போது, மின்–கையொப்ப சேவையானது, சுகாதாரத்துறை, பதிவுத்துறை, நிலநிர்வாகத்துறை,

புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையரகம், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், நகர் ஊரமைப்பு இயக்குநரகம், கல்வி, சமூகப் பாதுகாப்பு போன்ற 8 துறைகளால் பயன்படுத்தப்படுகிறது. 2022-23-ஆம் ஆண்டில் 35,71,517 மின்-கையொப்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**8.5 கணினி அடிப்படையிலான தேர்வுகள் சேவை**

தமிழ்நாடு மின்-ஆளுமை முகமையானது, "கணினி அடிப்படையிலான இணையவழி தேர்வை ஒரு சேவையாக' வழங்குகிறது. இச்சேவை பல்வேறு அரசுத் துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை விரைவான மற்றும் வெளிப்படையான, இடையூறில்லாத பாதுகாப்பான முறையில் குறித்த கால அளவில் நிரப்பப் பயன்படுகிறது. மேலும், தமிழ்நாடு மின்-ஆளுமை முகமையானது, M/s. NSEIT என்ற நிறுவனத்தை, அனைத்து அரசுத் துறைகளும் இணைய வழியில் தேர்வு நடத்துவதற்கு,

வரையறுக்கப்பட்ட விலை மதிப்பு ஒப்பந்த அடிப்படையில் செயல்படுத்தும் பங்குதாரராக தெரிவு செய்துள்ளது. இணையவழித் தேர்வு சேவையானது, தேர்வுக்கு முந்தைய செயல்முறை, தேர்வு செயல்முறை மற்றும் தேர்வுக்குப் பிந்தைய செயல்முறை ஆகிய மூன்று செயல்முறைகளை உள்ளடக்கியுள்ளது.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வழங்கும் இச்சேவையைப் பயன்படுத்தி, 2022–2023–ஆம் நிதி ஆண்டில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (CMDA), தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS), ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB), மருத்துவ பணிகள் தேர்வு வாரியம் (MRB), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் (MHC) ஆகிய ஆறு துறைகளுக்கான, 492 காலிப்பணியிடங்கள் பாதுகாப்பான மற்றும் எளிய முறையில்

வெற்றிகரமாக நிரப்பப்பட்டுள்ளன. 2022–23–ஆம் ஆண்டில், சுமார் 11.4 இலட்சம் விண்ணப்பதாரர்கள் இந்த இணையவழித் தேர்வுச் சேவையின் மூலம் தேர்வு எழுதியுள்ளனர்.

**8.6 தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புத் தணிக்கை**

தமிழ்நாடு மின்ஆளுமை முகமை (TNeGA) அனைத்து அரசு வலைதளங்கள்/மென்பொருள் செயலிகள்/தொலைபேசி செயலிகள் ஆகியவற்றிற்கு, CERT–IN என்ற அமைப்பினால் பட்டியலிடப்பட்ட தணிக்கையாளர்களை கொண்டு CERT/STQC–ஆல் குறிப்பிடப்பட்டுள்ள, வழிகாட்டுதல்கள் மற்றும் தரநிலைகளின்படி பாதுகாப்புத் தணிக்கையை மேற்கொள்கிறது.

தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் (TNSDC) ஏதேனும் துறை சார்ந்த வலைதள மென்பொருள் செயலியை, இணையதளத்தில் செயல்படுத்துவதற்கு முன்பும் (Host), தணிக்கைச் சான்றிதழ்

காலாவதியாகும் முன்பும்/மென்பொருள் செயலியில் மாற்றம் செய்யப்பட்ட பின்பும், பாதுகாப்புத் தணிக்கை கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

வலைத்தளம் நிலையானதாகவோ அல்லது இயக்கநிலையில் (Dynamic) இருந்தாலும், ஒவ்வொரு ஆண்டும் அல்லது தணிக்கை சான்றிதழ் வழங்கப்பட்ட ஒரு வருட காலத்திற்குள் வலைதளத்தில் பெரிய மேம்பாடு அல்லது மாற்றம் மேற்கொள்ளும்போதும், பாதுகாப்பு தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், தமிழ்நாடு மின்ஆளுமை முகமையானது அனைத்து அரசு இணையதளங்கள்/ இணைய செயலிகள்/கைப்பேசி செயலிகள் ஆகியவற்றின் பாதுகாப்பு தணிக்கையை வருடத்திற்கு ஒருமுறை இலவசமாக மேற்கொள்வதுடன், அடுத்துவரும் ஆண்டுகளிலும் மேற்கொண்டு வருகிறது.

இதுவரை, 2022-2023-ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் பல்வேறு அரசுத்துறைகளில், சுமார் 72 இணையதளங்கள் / இணைய செயலிகள்/ கைப்பேசி செயலிகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன.

## 9. கொள்கைகள் மற்றும் தரநிர்ணயங்கள்

### 9.1 குறிப்பு தரநிலைகள்

தரவு மற்றும் இணையப் பாதுகாப்பு பதிப்பு 1.0-க்கான 'குறிப்புத் தரநிலைகள்' என்பது மின் ஆளுமைத் திட்டங்களுக்குத் தொடர்புடைய தரநிலைகளின் பட்டியலின் தொகுப்பாகும். தரநிலைகள் 'கட்டாயம்' மற்றும் 'பரிந்துரைக்கப்பட்டவை' என வகைப்படுத்தப்பட்டுள்ளன. துறைகளின் அனைத்து மின்-ஆளுமை பயன்பாடுகள் / மென்பொருள் / வன்பொருள் விவரக்குறிப்புகள் கட்டாயத் தரநிலைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும். மேலும் அனைத்து ஒப்பந்தப் புள்ளிகளும் திட்டத்தின்

ஒவ்வொரு கட்டத்திலும் ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) முதன்மை நிர்வாக அதிகாரி தலைமையிலுள்ள தரநிலை இணக்க தொழில்நுட்பக் குழுவால் (SCTC) ஆராய்ந்து ஒப்புதல் அளிக்கப்படும். தற்போது இது அனைத்து புதிய மின் ஆளுமைப் பயன்பாடுகளுக்கு (Applications) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 9.2 தமிழ்நாடு தரவுக் கொள்கை

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) தகவல் தொழில்நுட்பவியல் துறையால் அரசாணை (நிலை) எண்.16, தகவல் தொழில்நுட்பவியல் (இ1) துறை, நாள் 10.03.2022 வாயிலாக வெளியிடப்பட்ட தமிழ்நாடு தரவுக் கொள்கையின் அடிப்படையில், அரசு தரவுகளுக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகமையாகும். தமிழ்நாடு மின்ஆளுமை முகமையால் சேகரிக்கப்பட்ட தரவுகளுக்கு, அவற்றை அளித்த தொடர்புடைய முகமை, துறை, அமைச்சகம், நிறுவனம் போன்றவை முதன்மை

உரிமையாளராகவும், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இணை உரிமையாளராகவும் இருக்கும்.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் முதன்மை நிருவாக அதிகாரி, இந்த கொள்கை மற்றும் கோட்பாடுகளை செயல்படுத்துவதற்கான மாநில தலைமை தரவு அதிகாரி (Chief Data Officer) ஆவார்.

**தரவுக் கொள்கைகளின் பதின்மூன்று கோட்பாடுகள் பின்வருமாறு** :

1. வெளிப்படைத்தன்மை
2. தனியுரிமை
3. நெறிமுறைகள் மற்றும் சமபங்கு
4. இளக்கத்தன்மை
5. வெளிப்படைத் தன்மை
6. சட்ட இணக்கம்
7. அறிவுசார் சொத்துப் பாதுகாப்பு
8. இடையியக்கம் மற்றும் தரநிலைகள்
9. தரம்

10. பாதுகாப்பு

11. பொறுப்பு மற்றும் கடமை

12. நிலைத்தன்மை

13. பயன்பாடு

தற்போது இந்த கொள்கை நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

## 10. இந்திய அரசு இணைய தளங்களுக்கான தரநிர்ணயம்

அரசாங்க இணையதளங்கள்/செயலிகளில் தகவல் மற்றும் சேவைகளின் பயன்பாடு, பயனர் மையத்தன்மை மற்றும் அனைவரும் எளிதாக அணுக இணையதளங்களை வடிவமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்கான வழிகாட்டுதல்களை, இந்திய அரசு (GIGW) வெளியிட்டுள்ளது. இந்த வழிகாட்டுதல்களை உறுதியாகப் பயன்படுத்தினால், அது உள்ளடக்கம், விளக்கக்காட்சி மற்றும் அணுகுமுறையில் அதிக அளவு நிலைத்தன்மை

மற்றும் சீரான தன்மையை உறுதி செய்து, இணையவழியான அரசு தீர்வுகளை மேம்படுத்தும்.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, தொடர்ந்து அரசு வலைத்தளங்களை சரிபார்த்து, இந்திய அரசின் இணையதளங்களுக்கான வழிகாட்டுதல்களுக்கு (GIGW) இணங்க அரசு வலைதளங்கள்/ செயலிகளைப் புதுப்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க அனைத்து அரசு துறைகளுக்கும் வழிகாட்டுகிறது. மார்ச் 16, 2023 அன்றைய நிலையில், 424 அரசு இணையதளங்கள் மாதத்திற்கு இருமுறை சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, 80 இணைய தளங்களில் ஸ்க்ரீன் ரீடர் இருப்பதும், 100 இணைய தளங்களில் எழுத்தளவு அதிகரித்தல் / குறைத்தல் அம்சம் உள்ளதும் கண்டறியப்பட்டது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, ஸ்கிரீன் ரீடர், வண்ண மாறுபாடு, எழுத்துரு அதிகரிப்பு மற்றும் குறைப்பு அம்சத்தை செயல்படுத்த அரசுத் துறை

தலைமையிடத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

**11. சாதனைகள் மற்றும் விருதுகள்**

- NeSDA – 85 சதவிகிதத்திற்கும் அதிகமான இணக்கத்துடன் மக்களுக்கு ஆன்லைன் சேவைகளை வழங்குவதில் உள்ள செயல்திறன் அடிப்படையிலான தேசிய மின் ஆளுமை சேவை வழங்கல் மதிப்பீடு 2021–இல் (NeSDA 2021) தமிழ்நாடு 2–வது இடத்தில் உள்ளது.
- உழவன் கைபேசி செயலியைப் பயன்படுத்தி செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பூச்சி மற்றும் நோய் கண்டறிதல், 2022–ஆம் ஆண்டிற்கான முன்மாதிரி வகையின் கீழ் NASSCOM 'AI & கேம் சேஞ்சர்ஸ்' விருதை வென்றது.
- மூன்று செயற்கை நுண்ணறிவு (AI) திட்டப்பணிகள் – FRAS, செயற்கை

நுண்ணறிவு (AI) சார்ந்த பூச்சி மற்றும் நோய் கண்டறிதல், e-Paarvai ஆகியவை "இந்திய செயற்கை நுண்ணறிவு (AI) 75 @ 75 ஆராய்ச்சி பயண அறிக்கையில்" பட்டியலிடப்பட்டுள்ளன.

- மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி திட்டத்திற்கான மின் ஆளுமை தங்க விருது 2022.
- இ-முன்னேற்றம் பயன்பாட்டிற்கான மின் ஆளுமை வெள்ளி விருது 2022.

**12. தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub)**

"தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub)" ஒன்றிய அரசின் பங்களிப்புடன் பொது-தனியார் கூட்டாண்மை மாதிரியில் நிறுவப்பட்ட இந்தியாவின் முதல் புதுமை முயற்சிகளுக்கான மையமாகும்.

iTNT Hub சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 30,000 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. வளர்ந்து

வரும் மற்றும் புதிய ஆழ்நிலைத் தொழில்நுட்ப (Deep Tech) நிறுவனங்களை ஊக்குவித்தல், தொழில் மற்றும் கல்வித் துறைகளுக்கிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துதல், உலகளவில் சுற்றுச்சூழல் கூட்டாண்மைகளை உருவாக்குதல், தொழில் வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கான ஆதரவினை குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், புதுமைக் கண்டுபிடிப்புகளுக்கான புதிய நிறுவனங்களுக்கு அளித்தல் மற்றும் தமிழ்நாட்டின் புதிய தொழில் முனைவோர் உலகளாவிய சந்தையை அணுகுவதற்கான திட்டங்களை வகுத்தல் ஆகியவற்றில் iTNT Hub முக்கிய கவனம் செலுத்தும்.

**13. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG)**

நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது 17 இலட்சியங்களுடன் 169 இலக்குகளை அளவிடக்கூடிய தொகுப்பு ஆகும். இந்த 17 இலட்சியங்கள் பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் சமூகக் கூறுகளை சமநிலைப்படுத்துவதுடன்,

அனைவருக்கும் நிலையான எதிர்காலத்தினை வழங்க ஒரு முயற்சியாகும்.

தமிழ்நாட்டில் இதன் செயல்பாட்டை கண்காணிக்க தலைமை செயலாளர் தலைமையில் உயர்மட்டகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த வளர்ச்சி இலக்குகளை ஆய்வு செய்ய மற்றும் கண்காணிக்க 8 பணி குழுக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இது திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் செயலாக்கத் துறை மற்றும் தமிழ்நாடு மாநில திட்டக்குழு வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இந்த திட்டத்திற்கான தரவுகளை அனைத்து துறைகள் மற்றும் வாரியங்களில் இருந்து சேகரிக்கும்.

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் ஒரு நிலையான

வளர்ச்சி இலக்குக் குழு, கீழ்கண்ட உறுப்பினர்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது:–

1. இணை முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) – குழுத் தலைவர்.
2. இணை இயக்குனர் (தொழில்நுட்பம்), தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) – உறுப்பினர்.
3. பொது மேலாளர் (நிர்வாகம்), தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV) – உறுப்பினர்.
4. பொது மேலாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்), தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) – உறுப்பினர்.
5. பொது மேலாளர் (மனிதவளம்) தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) – உறுப்பினர்.

**தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் நிலையான வளர்ச்சி இலக்கக் குறியீடு மற்றும் சாதனைகள்**

| வ. எண் | குறியீடுகள் | 2022–23 செயல்பாடுகள் (20.03.2023 வரை) |
|---|---|---|
| 1 | 16.6.1: பொதுமக்களுக்கு இணையதளம் வழியாக வழங்கப்படும் அரசு சேவைகளின் எண்ணிக்கை | 235 |
| 2 | 16.6.1a: கைபேசிவழி ஆளுமைக்காக ஒன்றிணைக்கப்பட்ட துறை / முகவர் எண்ணிக்கை | 64 |
| 3 | 16.6.1b: இ–தால்(e–Taal) வலை தளத்தில் மின் பரிமாற்றங்களின் எண்ணிக்கை (கோடியில்) | 241.42 கோடி |
| 4 | 16.6.1c: செயல்பாட்டில் இருக்கும் பொது சேவை மையங்களின் எண்ணிக்கை | 9,455 |

## அத்தியாயம்–IV

## தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV)

### 1. முன்னுரை

தமிழ்நாடு அரசு, அரசாணை (நிலை) எண்.22, தகவல் தொழில்நுட்பவியல் துறை, நாள் 13.08.2007–இன் படி, அரசு கேபிள் டிவி நிறுவனம், இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956–ன் கீழ், உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களின் வாழ்வாதாரத்தைக் பாதுகாக்கவும், குறைந்த கட்டணத்தில் சிறந்த கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டும் 04.10.2007 அன்று உருவாக்கப்பட்டது. "அரசு கேபிள் டிவி நிறுவனம்" பின்னர் "தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்" (TACTV) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

## 2. தொலை நோக்குப் பார்வை

பொதுமக்களுக்கு தரமான டிஜிட்டல் கேபிள் டிவி சேவைகள், அரசு இ–சேவை மைய சேவைகள் மற்றும் இணைய தள சேவைகளை புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குறைந்த விலையில் வழங்குவது இதன் முக்கிய நோக்கமாகும்.

## 3. குறிக்கோள்

- உயர்தரமான கேபிள் டிவி சேவையைக் குறைந்த கட்டணத்தில் உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மூலமாகப் பொது மக்களுக்கு வழங்குதல்.
- உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்திடும் வகையில் கேபிள் டிவி மற்றும் இணைய சேவையை வழங்குதல்.

- பொது மக்களுக்கு உயர்தர இணைய சேவையை குறைந்த கட்டணத்தில், உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மூலமாக வழங்குதல்.

## 4. டிஜிட்டல் கேபிள் டிவி சேவை

மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் 17.04.2017 அன்று டிஜிட்டல் கேபிள் டிவி சேவைகளை வழங்க தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் (DAS License) வழங்கி உள்ளது. மாநில அரசு நிறுவனமான தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் இந்தியாவிலேயே டிஜிட்டல் உரிமம் பெற்ற முதல் நிறுவனமாகும். சிறந்த டிஜிட்டல் கேபிள் டிவி ஒளிபரப்பினை உறுதி செய்வதற்காக, சென்னையில் உள்ள கட்டுபாட்டு அறை MPEG2 தொழில்நுட்பத்திலிருந்து MPEG4 தொழில்நுட்பத்திற்க்கு தரம் உயர்த்தப்பட்டது.

டிஜிட்டல் கேபிள் டிவி சேவைக்காக சென்னையில் உள்ள கட்டுபாட்டு அறை MPEG4 தொழில்நுட்பத்திற்கு தரம் உயர்த்தப்பட்டு 01.09.2017 முதல் விலையில்லா வரையறை செட்டாப் பாக்ஸ்களை (SD) தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கியது. சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய 5 இடங்களில் உயர் வரையறை செட்டாப் பாக்ஸ்கள் (HD) சேவையை 02.07.2018 அன்று முதல் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், டிஜிட்டல் முறையில் 218 சேனல்களை (136 கட்டணமில்லா சேனல்கள் + 82 கட்டண சேனல்கள்) ரூ.140/- + GST என்ற சந்தா கட்டணத்தில் வழங்குகிறது. இது நாட்டிலேயே மிகக் குறைந்த கேபிள் டிவி சந்தா கட்டணமாகும். இதில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு ரூ.70/- + GST என்றும் உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு

ரூ.70/– + GST என்றும் வருவாய் பங்கீடு நிர்ணயம் செய்யப்பட்டது.

குறைந்த கட்டணத்தில் புதிய தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய செட்டாப் பாக்ஸ்கள் மூலம், தரமான டிஜிட்டல் கேபிள் டிவி ஒளிபரப்பினை பொது மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 5. அரசு இ–சேவை மையங்கள்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அரசின் சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்காக, மாநிலம் முழுவதும் 2014 – ஆம் ஆண்டு அரசு இ–சேவை மையங்களை நிறுவியது. தற்பொழுது, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 511 அரசு இ–சேவை மையங்களை தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புறங்களில் நிர்வகித்து 136 வகையான சேவைகளை வழங்கி வருகிறது. இவற்றுடன்

கூடுதலாக பின்வரும் சேவையை பிரத்தியேகமாக வழங்கி வருகிறது.

- தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்படுபவர்களின் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யும் சேவை.

அரசு இ–சேவை மையங்களின் சேவைகளை பொது மக்களுக்கு வழங்குவதை விரிவுபடுத்தவும், தமிழ்நாட்டில் உள்ள வேலையில்லா இளைஞர்கள் சுயதொழில் புரிவதற்காகவும், இந்நிறுவனத்துடன் இணைந்து வருவாய் பங்கீட்டு முறையில் செயல்பட விருப்பமுள்ள நகர்புற இன்டர்நெட் பிரௌசிங் சென்டர் உரிமையாளர்களை, விருப்பமனு அளிக்கக் கோரி அறிவிப்பு வெளியிடப்பட்டு, நாளதுவரை, 2148 விண்ணப்பதாரர்களுக்கு அரசு சேவைகளை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 6. நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் (PECs)

தமிழ்நாட்டில் புதிய ஆதார் சேர்க்கை மேற்கொள்ளும் பணிக்காக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை/ மின் ஆளுமை ஆணையரகத்தை பதிவாளராக தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. ஆதார் சேர்க்கை பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு 01.10.2016 முதல் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அங்கீகாரம் வழங்கியது. தற்பொழுது, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 318 நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களை மாநிலம் முழுவதும் அமைத்துள்ளது. மேலும் பொது மக்களின் தேவைக்கேற்ப, தற்போதுள்ள 318 அரசு நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களின் எண்ணிக்கையை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 7. தமிழ்நாடு இணையம் மற்றும் இணைப்பு சேவை நிறுவனம் மூலம் இல்லங்களுக்கு இணைய சேவை (TANICS)

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், இன்டர்நெட் தொடர்பான சேவைகளை பொதுமக்களுக்கு, குறைந்த விலையில் வழங்குவதற்காக தமிழ்நாடு இணையம் மற்றும் இணைப்பு சேவை நிறுவனம் (TANICS) என்ற துணை நிறுவனத்தினை 05.11.2020 அன்று துவக்கியது. மத்திய அரசின் தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையிடமிருந்து இன்டர்நெட் சேவை வழங்குவதற்காக ISP உரிமம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## அத்தியாயம்–V

## தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)

**தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனமானது** (TANFINET) தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளுக்கு "பாரத்நெட்" இரண்டாம் கட்டம் திட்ட செயலாக்கத்தின் மூலம், அதிவேக அலைக்கற்றை இணைப்பை வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சிறப்பு நோக்கு நிறுவனம் ஆகும். அதிவேக அலைக்கற்றை இணைப்பினை, நகர்புறம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தும் பொருட்டு 'தமிழ்நெட்' திட்டத்தினை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. "பாரத்நெட்" மற்றும் 'தமிழ்நெட்' ஆகியவற்றை இணைத்து ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பினை நிறுவுவதன் வாயிலாக தகவல் தொழில்நுட்பத்தின்

அறிவுசார் ஆற்றலை மாநிலம் முழுவதும் உள்ள பொது மக்கள் பயன்படுத்தி மேன்மையடைய இயலும்.

### 1. பாரத்நெட்

பாரத்நெட் திட்டத்தினை, தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்த, ஒன்றிய அரசு ரூ.1815.31 கோடி (USOF நிதி) ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 57,500 கி.மீ தொலைவிற்கு மாநிலம் முழுவதும் உள்ள 12,525 கிராம பஞ்சாயத்துகளையும் இணைக்க கண்ணாடி இழை வடம் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அனைத்து கிராம பஞ்சாயத்துகளிலும் 1 Gbps அளவிலான அலைக்கற்றை மூலம் கிராமப்புறப் பகுதிகளில் சேவை வழங்குநர்கள் மூலம் அதிவேக அலைக்கற்றை இணைய சேவையினை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம்

தொலை மருத்துவம் (Tele Medicine), தொலை தூரக் கல்வி (Tele Education) மற்றும் புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடுகள் போன்றவை கிராமப்புற மக்களுக்கு கிடைக்கச் செய்திட இயலும்.

இத்திட்ட செயலாக்கம், புவியியல் ரீதியாக நான்கு தொகுப்புகளாக (A, B, C மற்றும் D) கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது.

| தொகுப்பின் பெயர் | வட்டாரங்களின் எண்ணிக்கை | கிராமப் பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | கண்ணாடி இழை வட வழித்தடம் | |
|---|---|---|---|---|
| | | | உயர்மட்ட கம்பத்தின் வழியாக (கிலோ மீட்டரில்) | நிலத்தட வழியாக (கிலோ மீட்டரில்) |
| A | 75 | 3,095 | 12,221 | 1,696 |
| B | 94 | 3,001 | 12,142 | 1,558 |

| | | | | |
|---|---|---|---|---|
| C | 110 | 3,326 | 14,071 | 1,438 |
| D | 109 | 3,103 | 12,703 | 1,924 |
| **மொத்தம்** | **388** | **12,525** | **51,137** | **6,616** |

தமிழ்நாட்டில் பாரத்நெட் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்துவதற்காக நான்கு தொகுப்புகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களுடன் "முதன்மை சேவை ஒப்பந்தம்" மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 09.06.2022 அன்று கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை ஊராட்சி ஒன்றியம், முத்தலகுறிச்சி கிராமப் பஞ்சாயத்தில் கண்ணாடி இழை கம்பி வடம் பதிக்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

மாவட்டங்களில் பாரத்நெட் திட்டத்தின் செயலாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இதுவரை 2,007 கிராமப் பஞ்சாயத்துகள் கண்ணாடி இழை வடம் (OFC) மூலம்

அருகில் உள்ள வட்டார ஊராட்சி ஒன்றிய அலுவலக தலைமையிடத்துடன் இணைக்கப்பட்டு, அதன் செயல்பாடுகள் சென்னையிலுள்ள வலையமைப்பு இயக்க மையத்தில் (NOC) தெரியும்படி செய்யப்பட்டுள்ளது. ஓராண்டிற்குள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளும் பாரத்நெட் திட்டத்தின் மூலம் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2. இறுதிக் கட்ட இணைய இணைப்பு

2022-23-ஆம் ஆண்டின் மூலதன முதலீட்டிற்கான மாநிலங்களுக்கான சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் "பாரத்நெட் இறுதிக் கட்ட இணைய இணைப்பு (BharatNet Last Mile Connectivity)" திட்டத்தைச் செயல்படுத்த ரூ.184 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பாரத்நெட் வலையமைப்பின் வழியாக ஏறக்குறைய 20,000 அரசு அலுவலகங்களை இணைக்க இயலும்.

மேலும், தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பில் (TNSWAN) இணைக்கப்பட்டுள்ள அரசு அலுவலகங்களையும் படிப்படியாக இத்திட்டத்தின் வலையமைப்பிற்கு மாற்றிட திட்டமிடப்பட்டுள்ளது.

**3. ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பு**

தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் நன்மைகளை, பொது மக்கள் குறைந்த விலையில் அடையும் வகையில் மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை கண்ணாடி இழை வடம் கொண்டு இணைப்பதே "தமிழ்நெட்" திட்டத்தின் நோக்கமாகும். "பாரத்நெட்" திட்டம் கிராமப்புறங்களுக்கு மட்டுமே அதிவேக அலைக்கற்றை இணைப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், "பாரத்நெட்" திட்டம் அணுகல் வலையமைப்பாக (Access) மட்டுமே செயல்படும். ஆனால் "தமிழ்நெட்"

திட்டமானது நகர்ப்புறம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு அதிவேக அலைக்கற்றை இணைப்பை வழங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், "தமிழ்நெட்" திட்டம், மைய (Core) மற்றும் ஒருங்கிணைப்பு (Aggregrate) வலையமைப்பாகவும் செயல்படும்.

“தமிழ்நெட்“ திட்டம், “பாரத்நெட்“ திட்டத்தின் செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையில் பேக்ஹால் (Backhaul) கண்ணாடி இழை உட்கட்டமைப்பாக செயல்படும். இத்திட்டம் பாரத்நெட் திட்டத்துடன் இணைந்த, ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பை (UDI) உருவாக்க உதவும். இது தமிழ்நாட்டு மக்களுக்கு குறைந்த விலையில் தரமான டிஜிட்டல் சேவைகளை வழங்குவதற்கு முக்கிய கட்டமைப்பாகத் திகழும்.

## 4. ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பின் (UDI) நன்மைகள்

பள்ளிக்கல்வி, உயர்கல்வி, காவல் துறை, சுற்றுலா துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள், சுகாதாரம், கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை, பதிவுத் துறை போன்ற பல்வேறு அரசுத் துறைகள், அரசு சேவைகளை பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் இணையவழி (Online) சேவைகளை வழங்கி வருகின்றன. இச்சேவைகளுக்காக அனைத்து துறைகளும் அதிக அளவில் செலவு செய்யும் நிலையே தற்போது உள்ளது. இந்த ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பு (பாரத்நெட் மற்றும் தமிழ்நெட்)–க்கு மாறுவதன் மூலம், இத்தகைய இணையவழி சேவைகளைப் பயன்படுத்துகின்ற அரசுத் துறையினர், செலவினங்களைக் குறைத்து, அதிக அலைவரிசையுடன் கூடிய இணைப்புகளின் வழியாக இணையவழி சேவைகளையும், அதன்மூலம்

துறைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலும். குறிப்பாக கிராமப்புறங்களில் இதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப் பெற்று, பொது மக்கள் அனைவரும், அவர்களின் இல்லங்களிலேயே அரசின் பல்வேறு இணையவழிச் சேவைகளைப் பெறும் வகையில் மாற்றத்தை ஏற்படுத்துவது, மாநிலத்தின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்த உதவும்.

## அத்தியாயம்–VI

## தமிழ் இணையக் கல்விக்கழகம் (த.இ.க.)

### 1. அறிமுகம்

தமிழ் இணையக் கல்விக்கழகம், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1975, பிரிவு 27–இன் கீழ் தமிழ் இணையப் பல்கலைக்கழகமாக (த.இ.ப.) நிறுவப்பட்டு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் இயங்கி வருகிறது. தமிழ் இணையப் பல்கலைக்கழகமானது தமிழ் இணையக் கல்விக்கழகமாக 2010–ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் நாள் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் முக்கியமான குறிக்கோள் தமிழ்க் கல்வியை இணையம் மூலம் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு அளிப்பது, தமிழ் நூல்களை மின்னுருவாக்கம் செய்தல் மற்றும் கணினித் தமிழை வளர்ப்பதாகும்.

**2. நோக்கங்கள்**

- தமிழ் மொழியில் சான்றிதழ், மேற்சான்றிதழ், பட்டயம், மேற்பட்டயம், பட்டம் முதலிய கல்வித் திட்டங்களை நடத்துதல்.
- கணினித் தமிழை மேம்படுத்துதல்.
- தமிழ் மின் நூலகம் மற்றும் பண்பாட்டு மின்களஞ்சியத்தை நிர்வகித்தல்.
- தமிழர் பண்பாடு மற்றும் நாகரிகம் பற்றிய தகவல்களை உலகம் முழுவதும் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும், மற்றவர்களுக்கும் அளித்தல்.

**3. கல்வித் திட்டங்கள்**

தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் மழலைக் கல்வி, சான்றிதழ்க் கல்வி, மேற்சான்றிதழ்க் கல்வி, பட்டயம், மேற்பட்டயம், இளநிலைப் பட்டம் (தமிழியல்) முதலான கல்வித் திட்டங்கள் அளிக்கப்படுகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

**3.1 மழலைக் கல்வி**

மழலைக் கல்வி என்பது இளஞ்சிறார்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**3.2 சான்றிதழ்க் கல்வி**

சான்றிதழ்க் கல்வி பின்வரும் மூன்று நிலைகளில் வழங்கப்படுகின்றன:–

- அடிப்படை நிலை (1 மற்றும் 2–ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- இடை நிலை (3 மற்றும் 4–ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- மேல் நிலை (5 மற்றும் 6–ஆம் வகுப்புகளுக்கு இணையானது)

இக்கல்வித் திட்டத்தின் வாயிலாக இதுவரை மொத்தம் 11,162 மாணவர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளனர்.

**3.3 மேற்சான்றிதழ்க் கல்வி**

மேற்சான்றிதழ்க் கல்வி பின்வரும் மூன்று நிலைகளில் வழங்கப்படுகின்றன:–

- நிலை 1 (7 மற்றும் 8–ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- நிலை 2 (9 மற்றும் 10–ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- நிலை 3 (11 மற்றும் 12–ஆம் வகுப்புகளுக்கு இணையானது)

இக்கல்வித் திட்டத்தின் வாயிலாக இதுவரை மொத்தம் 1,225 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**3.4 இளநிலைப் பட்டக் கல்வி (தமிழியல்)**

இளநிலைப் பட்டக் கல்வி (தமிழியல்) பாடத் திட்டமானது பட்டயம், மேற்பட்டயம், பட்டம் முதலான கூறுநிலைகளை உள்ளடக்கியது. இக்கல்வித் திட்டத்தின் வாயிலாக இதுவரை தேர்ச்சி பெற்றுள்ள

மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு :

- ❖ பட்டயப் படிப்பு – 2372
- ❖ மேற்பட்டயப் படிப்பு – 1755
- ❖ பட்டப் படிப்பு – 1394

மேற்கூறிய கல்வித் திட்டங்கள் 27 நாடுகளில் உள்ள 135 தொடர்பு மையங்களின் மூலமாக வழங்கப்படுகின்றன. அதன் விவரங்கள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணைய தளத்தில் (www.tamilvu.org) பதிவேற்றப்பட்டுள்ளன.

**4. இதர திட்டங்கள்**

**4.1 தீராக் காதல் திருக்குறள்**

தமிழ் இணையக் கல்விக்கழகம் திருக்குறளின் பெருமைகளை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணம் **'தீராக் காதல் திருக்குறள்'** என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து

நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதல் நிகழ்ச்சியாக தமிழ்நாட்டில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குக் 'குறளோவியம்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, சிறந்த ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.01.2022 (திருவள்ளுவர் தினம்) அன்று வள்ளுவர் கோட்டத்தில் பரிசுகள் வழங்கப்பட்டன. அவ்வோவியப் போட்டியில் சிறப்பான 365 ஓவியங்கள் தேர்வு செய்யப்பட்டு நாட்காட்டி புத்தகமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. இந்நாட்காட்டிப் புத்தகம் ஒரு முடிவில்லா நாட்காட்டியாக வடிவமைக்கப்பட்டு தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் கிடைக்கிறது.

21.12.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் **'குறள் இனிது'** என்ற தலைப்பில் திருக்குறள் நாட்டிய நாடகம் நடத்தப்பட்டது.

**4.2 தமிழ்ப் பரப்புரைக்கழகம்**

தமிழ் மொழியை இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழியாக வெளிநாடுகளில் கற்பிக்கும் அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குதல், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றிற்காக "தமிழ்ப் பரப்புரைக்கழகம்" உருவாக்கப்பட்டு ரூ.1 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இணையவழி தமிழ்க் கல்வி, தற்பொழுது 6 நிலைகளில் வழங்கப்பட்டு வருகின்றது. இது இப்பொழுது 5 நிலைகளாக (திறன் அடிப்படையில்) மாற்றியமைக்கப்பட்டு, பாடங்களை எழுதும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ் கற்கும் மாணவர்களுக்கு நிலை–1 முதல் பருவத்திற்கான பாடநூல்கள், துணைக்கருவிகள்

வெளியீடு மற்றும் தமிழ்ப் பரப்புரைக் கழகச் செயல்பாடுகளின் தொடக்கவிழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 24.09.2022 அன்று நடைபெற்றது.

**தமிழ்ப் பரப்புரைக்கழகத்தால் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

- சிலம்பாட்டப் பயிற்சிக்கான அடிப்படை பயிற்சி காணொலிகளாகப் படமாக்கம் செய்யப்பட்டுள்ளது.
- தேவாரப் பாடல்கள் சமகால இசை மற்றும் காட்சிகளாக வழங்கப்படுகின்றன.
- தன்னார்வல ஆசிரியர்களுக்கான "தமிழ் கற்பிப்பதற்காக ஆசிரியர் பட்டயப் பயிற்சி" என்ற கல்வித்திட்டம் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்கப்படவுள்ளது.

- இணையவழியில் தமிழ் கற்பிப்பதற்குத் தேவையான ஆசிரியர் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இணைய வழியில் தமிழ் வகுப்புகள் நடத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**4.3 உயர்கல்வி**

- "தமிழைப் பிழையின்றி எழுதுவோம்" என்ற தமிழ் இலக்கணப் புத்தகமானது உருவாக்கப்பட்டுள்ளது.
- இளநிலைத் தமிழியல் பட்டக் கல்விக்கான பாடத்திட்டம் சீராய்வு செய்யப்பட்டு, பாடங்கள் எழுதும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- முதுகலைத் தமிழ்ப் பட்டக் கல்விக்கான புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

# 5. மின்–நூலகம்

## 5.1 தமிழிணையம் – மின்நூலகம்

தமிழ் இணையக் கல்விக்கழகம், தமிழிணையம் மின் நூலகத்தை (www.tamildigitallibrary.in) உருவாக்கியுள்ளது. இம்மின் நூலகத்தில் 18–ஆம் நூற்றாண்டு முதல் தமிழ் இலக்கியம், சமயம், வரலாறு, மருத்துவம் முதலிய பொருண்மைகளைக் கொண்ட அரிய நூல்கள், பருவ இதழ்கள், பனை ஓலைச்சுவடிகள் உள்ளன. இந்த மின் நூலகம் தெற்காசிய மொழிகளில் மிகப்பெரிய மின் நூலகமாகத் திகழ்கிறது. 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள், பருவ வெளியீடுகள் மற்றும் 7,68,097 பனை ஓலைச்சுவடிகள் இடம் பெற்றுள்ளன. தமிழிணையம் மின் நூலகம் தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டும், அரிய ஆவணங்களை வழங்கியும் வருகிறது. இந்த இணைய மின் நூலகத்தை 4,41,22,519 முறை பயனர்கள் பார்வையிட்டுள்ளனர்.

## 5.2 உள்ளடக்கத் தமிழ் மின்நூலகம்

மின்நூலக இணையதளத்தை பார்வைக் குறைபாடுடையவர்களும் பயன்படுத்தும் வகையில் உள்ளடக்கத் தமிழ் மின்நூலகமாக மாற்ற ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது, 14 இலட்சம் பக்கங்களை உருபடத்திலிருந்து எழுத்துணரி முறையில் (OSR Technology) மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 5.3 அரிய ஒளி–ஒலி, ஒளிப்படங்கள் மற்றும் பிற வரலாற்று ஆவணங்கள் மின்னுருவாக்கம்

அரிய ஒளி–ஒலி, ஒளிப்படங்கள் மற்றும் பிற வரலாற்று ஆவணங்களை மின்னுருவாக்கம் செய்ய ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 5,535 ஒளி–ஒலி, ஒளிப்படங்கள் மற்றும் பிற ஆவணங்கள் மின்னுருவாக்கப்பட்டுள்ளன. மின் நூலக இணையதளத்தை மறுசீரமைக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன, இப்பணிகள்

முடிவடைந்த பின் மேற்கண்ட பொருண்மைகள் இணையத்தில் பதிவேற்றப்படும்.

## 5.4 தமிழர் தகவலாற்றுப்படை

தமிழ்மொழி, இலக்கியம், கலைகள் பற்றிய விரிவான மற்றும் ஒருங்கிணைந்த களஞ்சியமாகத் தமிழர் தகவலாற்றுப்படையினைத் த.இ.க. உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழக வரலாறு மற்றும் பண்பாடு சார்ந்த 31,158 ஒளிப்படங்களைக் கொண்ட www.tagavalaatruppadai.in என்ற இணையதளத்தையும் உருவாக்கியுள்ளது. இந்த தகவலாற்றுப்படை களஞ்சியம் தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டும், கூடுதல் கலைப்பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்களின் தகவல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டும் வருகின்றது. இந்த இணையதளத்தை 27,71,565 முறை பயனர்கள் பார்வையிட்டுள்ளனர்.

**5.5 மெய்நிகர் அருங்காட்சியகம் உருவாக்குதல்**

தமிழக வரலாறு மற்றும் பண்பாடு சார்ந்த பொருண்மைகளுக்கான மெய்நிகர் அருங்காட்சியகம் அமைக்க ரூ.7.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதலாம் ஆண்டிற்கு ரூ.1.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. இராஜேந்திர சோழனின் கடற்பயணங்கள் மற்றும் தென்கிழக்கு ஆசிய கடல் வாணிபம், சிலப்பதிகாரம் – புகார்க் காண்டம் – இந்திரவிழா ஆகியவற்றிற்கான கருப்பொருளுக்காக விருப்ப ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

## 6. இதர திட்டங்கள்

### 6.1 கப்பலோட்டிய தமிழன்–150–ஆவது பிறந்த நாள் விழா–நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளை இணையத்தில் வெளியிடல்

'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150–வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது நூல்கள் மற்றும்

கையெழுத்துப்பிரதிகள் மின்மயமாக்கப்பட்டு தமிழ் இணையக் கல்விக் கழக இணையத்தில் வெளியிடுதலுக்கான திட்டப் பணிகளில், 127 நூல்கள், கையெழுத்துப்பிரதிகள், ஒளிப்படங்கள், ஆவணங்கள் மற்றும் பல்லூடக ஆவணங்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு, வ.உ.சி. அவர்களுக்காக சிறப்பாக உருவாக்கப்பட்ட இணையப்பக்கம் 18.11.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது. (https://www.tamildigitallibrary.in/voc)

### 6.2 அனைத்துப் பல்கலைக்கழகங்களின் முனைவர் பட்ட ஆய்வுச் சுருக்கம், ஆய்வுத் தொகுப்புகள் மற்றும் கலைச்சொற்களின் பட்டியலை ஆவணப்படுத்தல்

தற்போது வரை 354 முனைவர் பட்ட ஆய்வேட்டின் ஆய்வுச் சுருக்கம் மற்றும் ஆய்வுத் தொகுப்புகள் உயர்கல்வித் துறையின் கீழுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற துறைகளிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்பொருண்மைகளுக்கான ஒப்புகைச்சான்று

வழங்கப்பட்டு வருகிறது. மின் நூலக இணையதளத்திலும் இவைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

## 7. ஆய்வு மற்றும் உருவாக்கம் – கணினித் தமிழ்ப் பிரிவு

### 7.1 கணினி மொழியியல்

கணினி மொழியியல் பிரிவானது இலக்கணக் குறிப்புடன் விரிதரவு, இருமொழி இணை தரவு (தமிழ் – ஆங்கிலம்) வரைபட தரவுதளம், தமிழ் இலக்கியங்களுக்கான சொல்லடைவு மற்றும் தொடரடைவுகள், கணினிக்கான தமிழ் இலக்கணம் உருவாக்குதல், கணினித் தமிழ்க் கருவிகள், இலக்கணக் குறிப்பு அளிக்கும் கருவிகள், வட்டெழுத்துகள் போன்ற எழுத்துருக்கள், ஒருங்குறி செயல்பாடுகள் போன்றவற்றை செயல்படுத்துகிறது.

### 7.2 Use case மற்றும் கணினிக் கருவிகள் உருவாக்கம்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பாடங்களுக்கான Usecase எழுதப்பட்டுள்ளது. மற்றும்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மின் நூலகத்திற்கான Usecase எழுதும் பணி நடைபெற்று வருகிறது.

### 7.3 கணித்தமிழ்ப் பேரவை (KTP)

கணித்தமிழ்ப் பேரவை என்பது கணினித் தமிழ் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த தமிழ் இணையக் கல்விகழகத்தால் உருவாக்கப்பட்ட திட்டமாகும். கல்லூரி மாணவர்கள் தமிழ் உள்ளடக்கம், செயலி உருவாக்கம், தமிழ் கட்டுரைகள் எழுதுதல் போன்றவற்றை செயல்படுத்துவதற்கு துறைசார்ந்த வல்லுநர்கள் அவர்களை ஊக்குவிக்கின்றனர். இதுவரை தமிழகம் முழுவதும் பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகளில் 212 கணித்தமிழ்ப் பேரவை மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**7.4 கணினித் தமிழ்க் கருவிகள் உருவாக்கம்**

கடந்த 2022–23–ஆம் ஆண்டு அறிவிப்பின்படி கணினித் தமிழ்க் கருவிகள் உருவாக்குவதற்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது அவை பின்வருமாறு:–

1. Chatbot and Question Answering System for Tamil
2. A Syntactic Parser for Tamil: A Data driven Approach
3. POS and Semantic role of labelling
4. Developing a sentiment Analyzer Tool for Code Mixed Tamil Online Text
5. Real–time multi-dialect automatic speech recognition system for Tamil
6. Multimodal Fused Tamil Hand written and Palm-leaf character recognition tool based on neural network
7. Hyphenation Support for Tamil typesetting.

**7.5 கணினித் தமிழில் நிரலாக்கப் போட்டி**

தமிழ் இணையக் கல்விக்கழகம் வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து 19.12.2022 அன்று மாணவர்களை ஊக்குவிப்பதற்காக ஒரு நிரலாக்கப் போட்டியை நடத்தியது. அதில் கீழ்கண்ட தலைப்புகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

1. Identifying context based precedent rulings for a given case in Tamil.
2. Identifying name boards on the bus stop (Udhavi)
3. Sign language subtitle generator in Tamil.

## அத்தியாயம்–VII

## தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT)

### 1. முன்னுரை

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT) என்பது ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும். இது 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் பொதுத்துறை மற்றும் தனியார் கூட்டு முயற்சியால் தொடங்கப்பட்ட அமைப்பாகும். ICTACT–ன் நோக்கம் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் உள்ள உயர்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பல்வேறு தொழில்நுட்பக் களங்களில் பயிற்சி அளிப்பதாகும்.

ICTACT நிறுவனம் ஆசிரியர் திறன் மேம்பாடு, மாணவர் திறன் மேம்பாடு, தொழில்முனைவோர் மேம்பாடு, இளைஞர் திறன் மேம்பாடு, ஆராய்ச்சி

மற்றும் வெளியீடுகள், டிஜிட்டல் திறன் மேம்பாடு மற்றும் தொழில் நிறுவன தொடர்பு போன்றவற்றை ஏழு தூண்களாகக் கொண்டு செயல்படுகிறது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் மற்றும் தொழில்துறைசார் முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு தன்னாட்சி நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

## 2. **செயல்பாடுகள்**

2022–23–ஆம் ஆண்டிற்கான ICTACT–இன் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்:

### 2.1 **ஆசிரியர் திறன் மேம்பாடு**

மாநிலத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் 137 ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் 4,700 ஆசிரியர்கள் பல்வேறு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் (ICT) திறன்களில் பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

2.2 **திறன் மேம்பாடு**

ICTACT மாநிலத்தில் உள்ள கிராமப்புற கல்லூரிகளில் பயிலும் 68,772 மாணவர்களுக்கு அவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்த பயிற்சி அளித்து சான்றிதழ் வழங்கியுள்ளது.

2.3 **தொழில் முனைவோர் மேம்பாடு**

தமிழ்நாடு முழுவதும் உள்ள 131 கல்லூரிகளைச் சேர்ந்த 33,968 மாணவர்கள் பயனடையும் வகையில், தொழில்முனைவோர் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

2.4 **இளைஞர் திறன் மேம்பாடு**

1. கல்லூரி மாணவர்களின் சுயமாக கற்கும் பழக்கத்தை வளர்ப்பதற்கும், முன்னணி தொழில்நுட்பங்களின் அடிப்படைகளை மாணவர்களே கற்கும் வகையிலும் "நியூ இந்தியா லெர்னாதன் 2022" ஏற்பாடு

செய்யப்பட்டது. இந்த முன்னெடுப்பில் 2,01,949 மாணவர்கள் பங்கேற்று 1,68,727 ஆன்லைன் சான்றிதழ் பயிற்சிகளை முடித்துள்ளனர்.

2. தமிழக மாணவர்களுக்கான இளைஞர் தலைமைத்துவ உச்சி மாநாடு 2022-இன் ஒரு பகுதியாக "யூத் டாக் 2022" நடத்தப்பட்டது. இந்நிகழ்வு தேர்ந்த இளம் பேச்சாளர்கள் மற்றும் தம் வயதொத்த சமூகத்தினருக்கு ஊக்கமளிக்கும் வகையில் தங்கள் எண்ணங்களைத் தெரிவிக்கக்கூடிய தலைவர்களை அடையாளம் காணும் நோக்கில் நடத்தப்பட்டது. சென்னை, கோவை, சேலம், கன்னியாகுமரி, மதுரை, புதுச்சேரி உள்ளிட்ட 6 மண்டலங்களில் "யூத் டாக்" நடத்தப்படுகிறது. இறுதிச் சுற்றில் பங்கேற்க, பிராந்திய இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் முதல் 100 மாணவர்களும், மண்டல இறுதிப்

போட்டியில் முதல் 6 வெற்றியாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்நிகழ்வில் 15,119 மாணவர்கள் கலந்துகொண்டனர். பிராந்திய இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள், பேச்சுத் திறனை வெளிப்படுத்தும் வகையில் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டனர்.

## 2.5 **ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்**

ICTACT நிறுவனம் காலாண்டு அடிப்படையில் சக மதிப்பாய்வு செய்யப்பட்ட 6 சர்வதேச ஆராய்ச்சி இதழ்களை வெளியிடுகிறது. 2022-23-ஆம் ஆண்டில், 187 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. இவை பல்வேறு சர்வதேச தரவுத்தளங்களில் நிரலிடப்பட்டுள்ளன.

- ஐசிடிஏசிடி (ICTACT) தகவல் தொழில் நுட்ப ஆய்விதழ் (IJCT)

- ஐசிடிஏசிடி (ICTACT) ஒளிப்பேழை மற்றும் காட்சி ஒளிப் பேழை ஆய்விதழ் (IJIVP)
- ஐசிடிஏசிடி (ICTACT) மென் கணினி ஆய்விதழ் (IJSC)
- ஐசிடிஏசிடி (ICTACT) நுண் மின்னணுவியல் ஆய்விதழ் (IJME)
- ஐசிடிஏசிடி (ICTACT) மேலாண்மைக் கல்வி ஆய்விதழ் (IJMS)
- ஐசிடிஏசிடி (ICTACT) தரவு அறிவியல் மற்றும் இயந்திர கற்றல் ஆய்விதழ் (IJD SML)

## 2.6 **டிஜிட்டல் திறன் மேம்பாடு**

ICTACT நிறுவனம் ஒன்றிய அரசின் திட்டமான "பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்ஷர்தா அபியான் (PMGDISHA)"–க்கான மதிப்பீடு மற்றும் சான்றளிப்பு முகமையாகும். 2022–23–ஆம் ஆண்டில் 15,14,418 விண்ணப்பதாரர்களுக்கு

டிஜிட்டல் கல்வியறிவுக்கான மதிப்பீடு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப் பெற்றுள்ளது.

### 2.7 தொழில் நிறுவனத் தொடர்பு

ICTACT கல்வித்துறையில் வரவிருக்கும் தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை வழங்குவதற்காக முன்னணி பெருநிறுவனங்களின் ஆதரவுடன் கீழ்காணும் மாநாடுகளை நடத்தியது. இந்த நிகழ்வுகளின் மூலம் 4,704 மூத்த கல்வியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

1. BRIDGE – கன்னியாகுமரி, சென்னை 2022 மற்றும் சென்னை 2023
2. 5G கான்ஃப்ளூயன்ஸ் 2022
3. ஆட்டோடெஸ்க் – சிந்தனை தலைமை சந்திப்பு 2022
4. சிம்போசியம் ஆன் ஆண்ட்ராய்டு அப்ளிகேஷன் டெவெலப்மென்ட் வித் கோட்லின்

5. ஹனிவெல் டிஜிட்டல் இளைஞர் திறன் மேம்பாட்டு உச்சிமாநாடு 2022

6. இன்ஃபோகாம் இந்தியா உச்சிமாநாடு 2022

7. UiPath கல்வித் தலைவர்கள் வட்டமேசை

8. சர்வீஸ் நவ் பார்ட்னர்ஷிப் துவக்கம்

9. ஆரக்கிள் உறுப்பினர் மைய அமர்வு

10. ஹனிவெல் கல்வி உச்சிமாநாடு 2022

## 2.8 **செயல்படுத்தப்பட்ட புதிய அரசுத் திட்டங்கள்** (2022–2023)

**நான் முதல்வன் – ஒரு அனுபவத் திட்ட அடிப்படையிலான கற்றல்**

"நான் முதல்வன்" திட்டத்தின்கீழ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) ஒரு அனுபவத் திட்ட அடிப்படையிலான கற்றல் திட்டத்தை ஒருங்கிணைத்தது. அண்ணா பல்கலைக்கழகம் பல்கலைக்கழக பங்குதாரராகவும், IBM தொழில்நுட்ப பங்குதாரராகவும், ICT அகாடமி ஆதரவு

பங்குதாரராகவும் உள்ளனர். மேலும் NASSCOM திறன் சான்றிதழ்க்கான பங்குதாரராக உள்ளது.

IBM நிறுவனம் 50 தொழிற்துறை சிக்கல்களை சவால்களாக வழங்கியது. பொறியியல் கல்வி பயிலும் மாணவர்கள் 100 மணிநேர அளவில் திட்ட அடிப்படையிலான கற்றலை 3 கல்வி கிரெடிட்களுடன் தேர்வு பாடமாக தெரிவு செய்து அச்சவால்களுக்கான தீர்வினை நல்கினர்.

ஆசிரியர்கள் மற்றும் தொழில்துறை வழிகாட்டிகளின் உதவியுடன் சுறுசுறுப்பான அணுகுமுறைகளுடன் இத்திட்டங்களை முடிக்க மாணவர்கள் நான்கு குழுக்களாகப் பணிபுரிந்தனர்.

திட்டத்தை வெற்றிகரமாக முடித்த மாணவர்களுக்கு "நாஸ்காம்" நிறுவனம் தேசிய திறன் சான்றிதழை வழங்கியது. ICTACT நிறுவனம், ஒருங்கிணைப்பு முகமையாக இருப்பதால் ஆசிரியர்

பயிற்சியை எளிதாக்கியதுடன், தமிழ்நாட்டில் மாணவர்களை அணிதிரட்டவும் உதவியது.

மொத்தம் 397 கல்லூரிகள் பதிவு செய்யப்பட்டு, 30 பயிலரங்குகள் நடத்தப்பட்டதுடன், 428 கல்லூரிகள் இணைந்து செயல்பட்டன, மேலும், 616 தனித்த தொடர்பு அலுவலர்கள் இணைக்கப்பட்டனர், 12,967 திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன, அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்த மற்றும் தன்னாட்சி நிறுவனங்களில் இருந்து 2,313 ஆசிரியர்கள் மற்றும் 6-வது செமஸ்டர் படிக்கும் 54,421 CSE/IT/ECE மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்தனர்.

**நான் முதல்வன் – கல்லூரி கனவு**

**12-ஆம்** வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு உயர்கல்விக்கு வழிகாட்டுவதற்காக "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் "கல்லூரி கனவுகள்" திட்டத்தை **மாண்புமிகு தமிழ்நாடு**

**முதலமைச்சர் அவர்கள்** நேரு உள்விளையாட்டு அரங்கில் தொடங்கி வைத்தார். பல்வேறு படிப்புகள், கல்லூரிகள், நுழைவுத் தேர்வுகள், கல்விக் கடன்கள் மற்றும் உதவித்தொகை போன்றவை பற்றிய விரிவான தகவல்களை இத்திட்டம் மாணவர்களுக்கு வழங்கியது.

ICTACT நிறுவனம் மாநிலம் முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களுடன் பரந்த தொடர்பை ஏற்படுத்தியுள்ளதன் மூலம் "நான் முதல்வன் – கல்லூரி கனவு" எனும் இத்திட்டத்தின் அற்புதமான வெற்றிக்கு காரணமாக அமைந்தது. வெற்றிகரமாக 4 நாட்கள் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனைத்து மாவட்டங்களிலும் 100–க்கும் மேற்பட்ட பேச்சாளர்கள் மற்றும் 70,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

## 2.9 உள்ளடக்கத்திற்காக பெருநிறுவனங்களுடன் புதிய கூட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (2022–23)

ICTACT நிறுவனம், சர்வீஸ் நவ் மற்றும் டேலி ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இது வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் மாணவர்கள் தங்கள் திறன்களை வளர்க்க உதவும்.

## 2.10 வேலை வாய்ப்புக்காக பெருநிறுவனங்களுடன் புதிய கூட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (2022–23)

ICTACT நிறுவனம், ஒமேகா ஹெல்த் கேர், கோரோ ஹெல்த், டீச் நூக், சிரஸ் லேப்ஸ், எம்எம்சி இன்ஃபோடெக் சர்வீசஸ், மேக்ஸ்டர், விஷனரி ஆர்சிஎம், க்ரூடன் டெக்னாலஜிஸ், லூமினா டேட்டாமேடிக்ஸ், ஈக்வினிட்டி, க்வெஸ் கார்ப், டிரினிட்டி ஸ்கில் ஒர்க்ஸ், ஃபோகஸ் எடுமேட்டிக்ஸ், ஆல்செக் டெக்னாலஜிஸ், பேங்க்ஸோன், ரெனால்ட், ஒலம் இன்ஃபர்மேஷன், ருத்ரம் டெக்னாலஜிஸ்,

டெலிகாம் துறை, வாக்கன் டெக்னாலஜிஸ், ஜென்பேக்ட், வின் வேஸ், தாஜ் சொல்யூஷன்ஸ், டிரான்பேக் ஸாஃப்ட்வேர் மற்றும் E2E பணியமர்த்தல் ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன்மூலம் மாணவர்கள் நல்ல நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெற்றிட இயலும்.

2023–ஆம் ஆண்டில் படித்து பட்டம் பெற்று வெளிவரும் (ஏப்ரல் 2022 முதல் ஜனவரி 2023 வரை) மாணவர்களுக்கான வேலைவாய்ப்பின் தாக்கம் பின்வருமாறு:–

நிறுவனங்களின் எண்ணிக்கை – 287

நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு நேர்காணல்களின் எண்ணிக்கை – 279

வேலைவாய்ப்பு பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை – 14,494

சராசரி சம்பளம்: ரூ.2.4 இலட்சம் (ஆண்டிற்கு)

## 2.11 புதிய அரசு ஒப்பந்தங்கள்

ICTACT நிறுவனம், தமிழ்நாடு காவல்துறை வீட்டு வசதிக் கழகம், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், நான் முதல்வன் மற்றும் TICEL பயோ பார்க் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இது வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் மாணவர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்த பெரிதும் உதவும்.

## 2.12 2022–2023–ஆண்டில் செயல்படுத்தப்படும் சமூகப் பொறுப்புணர்வுத் (CSR) திட்டங்கள்

ICTACT நிறுவனம், TACTV, ELCOT, Atos, Capgemini, Finastra, PayPal, Microsoft, Inspirisys Systems, Bajaj Finserv, Cisco, ITC Infotech, Cognizant, Honeywell, Lenovo, FedEx மற்றும் R Systems போன்ற முன்னணி பெருநிறுவனக் கூட்டாளர்களுடன் இணைந்து புதிய சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. இத்திட்டங்களின் மூலம்

வளர்ந்து வரும் தொழில்நுட்பத் திறன்கள், தொழில்முனைவு திறன்கள் மற்றும் டிஜிட்டல் கற்பித்தல் திறன்கள் ஆகியவற்றில் அளிக்கப்பட்ட பயிற்சியால் தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெற்றனர்.

| எண். | திட்டத்தின் பெயர் | செயல்படுத்தும் அமைப்பு/துறை |
|---|---|---|
| 1 | 1,750 வேலையில்லாத இளைஞர்கள் மற்றும் நலிந்த பிரிவினருக்கான வேலைவாய்ப்புத் திறன் திட்டம் | தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனம் |
| 2 | 1300 கல்லூரி ஆசிரியர்களுக்கான IT & Soft Skill அளிக்கும் ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் | தமிழ்நாடு மின்னணு நிறுவனம் |
| 3 | 1,000 மாணவியருக்கான | கேப்ஜெமினி |

| | | |
|---|---|---|
| | மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத் திறன்கள் அளிக்கும் மகளிரை உருமாற்றும் திட்டம் | |
| 4 | 2,500 மாணவர்களுக்கான மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத்திறன் அளிக்கும் மாணவர் அதிகாரமளிக்கும் திட்டம் | பேபால் |
| 5 | 500 மாணவர்களுக்கான BFSI திறன்கள் அளிக்கும் மாணவர்கள் உருமாற்று திட்டம் | Finastra |
| 6 | 400 கல்வியாளர்கள் மற்றும் 2,500 உயர்கல்வி மாணவர்களுக்கு இணையப் பாதுகாப்பு பயிற்சி | மைக்ரோசாப்ட் |

| | | |
|---|---|---|
| 7 | 5000 மாணவிகளுக்கான மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத் திறன்கள் அளிக்கும் Tech4ALL அனைத்து பெண்களுக்கும் அதிகாரமளிக்கும் திட்டம் | Cognizant |
| 8 | 8,150 மாணவர்களுக்கான மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத் திறன் அளிக்கும் ஹனிவெல் மாணவர் அதிகாரமளிக்கும் திட்டம் | ஹனிவெல் |
| 9 | 400 மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பத் துறையின் தயார்நிலை அளிக்கும் Aspire STEM கல்வித் திட்டம் | ஐடிசி இன்ஃபோடெக் |

| | | |
|---|---|---|
| 10 | 4,000 மாணவர்களுக்கான சில்லறை விற்பனை திறன் அளிக்கும் வேலைவாய்ப்புத் திறன் பயிற்சி | பஜாஜ் ஃபின்சர்வ் |
| 11 | 350 மாணவர்களுக்கு மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத்திறன் பயிற்சி | இன்ஸ்பைரிசிஸ் |
| 12 | 382 மாணவர்களுக்கான மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத்திறன் பயிற்சித் திட்டம் | லெனோவா |
| 13 | 432 மாணவிகளுக்கான மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத்திறன் அளிக்கும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் திட்டம் | FedEx |

| | | |
|---|---|---|
| 14 | 5012 மாணவர்களுக்கு இணையப் பாதுகாப்பு குறித்த தொழிற்பயிற்சி | சிஸ்கோ |
| 15 | 2768 மாணவர்களுக்கு IT, BFSI மற்றும் KPO திறன் பயிற்சி அளித்தல் | அடோஸ் |

**சமூகப் பொறுப்புணர்வுத்** (CSR) **திட்டங்கள் வழி பயனடைந்த மொத்த பயனாளிகள்:** 35,144

**2.13 2023 – 2024 ஆண்டிற்கான முன்மொழியப்பட்ட திட்டங்கள்**

| **S.No.** | **திட்டத்தின் பெயர்** | **அமைப்பு/துறை** |
|---|---|---|
| 1 | SC/ST/SCA சமூகத்தினர்கான அரசு மற்றும் சுயநிதி நிறுவனங்களில் இறுதியாண்டு பயிலும் 6000 பொறியியல், கலை மற்றும் அறிவியல் மாணவர்களுக்கான சில்லறை விற்பனை, IT, | தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (TAHDCO) |

| | | |
|---|---|---|
| | ITeS, BFSI & டெலிகாம் தொடர்பான வேலைத் தயார்நிலைத் திட்டம். | |
| 2 | மாநில திட்டக்குழு – தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் – 500 ஆசிரிய உறுப்பினர்கள் மற்றும் 10,000 மாணவர்களுக்கான திட்ட அடிப்படையிலான கற்றல் திட்டம் | மாநில திட்டக்குழு (SPC)– தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் (TANII) |
| 3 | 5 ஆண்டுகளில் 35,000 மக்களுக்கு வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் பயிற்சி மற்றும் சான்றிதழ் வழங்க உயர்தனிச் சிறப்பு நிறுவனம் நிறுவப்படும். இதில் தொழில் வல்லுநர்கள், அரசு அதிகாரிகள், ஆசிரிய உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் | தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பவியல் நிறுவனம் (ICTACT ) |

| | | |
|---|---|---|
| | உள்ளிட்டோர் பயன்பெறுவர். | |
| 4 | CSR திட்டத்தின்கீழ் திறன் மேம்பாட்டு திட்டம் | ஃபினாஸ்ட்ரா, ஆர் சிஸ்டம்ஸ், தமிழ்நாடு காவலர் குடியிருப்பு வாரியம், ஹனிவெல், அடோஸ், பஜாஜ் ஃபின்சர்வ் மற்றும் சிபிசிஎல் |
| 5 | தமிழ்நாடு முழுவதும் உள்ள மாணவர்களுக்கான திறன் மற்றும் ஆராய்ச்சிக்கான உயர் தனிச் சிறப்பு நிறுவனம் நிறுவப்படும். | TICEL பயோ பார்க் |

**வேலை வாய்ப்புக்காக முன்மொழியப்பட்ட திட்டங்கள்:**

வேலைவாய்ப்பு முகாம் நிகழ்வுகளின் எண்ணிக்கை: 24

நிர்ணயிக்கப்பட்ட வேலைவாய்ப்பு எண்ணிக்கை இலக்கு: 5,000 மாணவர்கள்

வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை: 200

நிர்ணயிக்கப்பட்ட வேலைவாய்ப்பு எண்ணிக்கை இலக்கு: 20,000 மாணவர்கள்

பங்குதாரர்களின் எண்ணிக்கை: 200 அமைப்புகள்

குறிப்பிட்ட திறன் பெற்றோர் – ஆட்சேர்ப்பு மூலம் – பயிற்றுவித்து பணியமர்த்தும் மாதிரி: 2,000 மாணவர்கள்

கல்லூரியில் தொழில் நிறுவன நேரடி ஆட்சேர்ப்பு: 500 – 1000 மாணவர்கள்

**த. மனோ தங்கராஜ்**
**தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்**




23 மார்ச் 2023 அன்று சென்னையில் நடைபெற்ற யூமாஜின் 2023
நிகழ்வின் துவக்கவிழா




25 மார்ச் 2023 அன்று யூமாஜின் நிகழ்வின் நிறைவு நாள் விழா




யூமாஜின் – 2-ஆம் நாள் நிகழ்வு



வரவிருக்கும் எல்காட் தொழில்நுட்ப கோபுரம்
எல்கோசெஸ் - சோழிங்கநல்லூர்



வரவிருக்கும் தகவல் தொழில்நுட்பக் கட்டடம்
விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்



தகவல் தொழில்நுட்பக் கட்டடம், ஓசூர்




தகவல் தொழில்நுட்பக் கட்டடம், இலந்தைகுளம், மதுரை



எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடம், ஜாகீர்
அம்மாபாளையம், சேலம்




எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடம்,
கங்கைகொண்டான், திருநெல்வேலி




எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடம், நவல்பட்டு,
திருச்சிராப்பள்ளி



எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடம்,
வடபழஞ்சி, மதுரை



பாரத்நெட் திட்ட செயலாக்கம்

# இ - முன்னேற்றம்


e-முன்னேற்றம்
Username
Password
Please Enter Captcha
4Cc5
Login

# மின் - அலுவலகம்




Government of Tamil Nadu
eOffice
Welcome To eOffice
LDAP ID/Login ID
Password
527436
Enter Captcha
Log in
Designed & Developed by NIC, Government of India
Implemented and maintained by TNeGA, IT & DS Dept
Copyright © 2009- 2022, NIC. All Rights Reserved

# இ - பார்வை


TNSBCS
Rukmani Lakshmipathy Salai,
Egmore,
Chennai 600008.
State Rural Health Mission was launched in Tamilnadu on 12.04.05 with the view to bring architectural correction of the health system to enable it to effectively handle increased allocations and promote policies that strengthen public health management and service delivery as prescribed under the NRHM of India. The program is for the period of 2005-2012. The programme is funded by Government of India.
English
தமிழ்
TNeGA
TNeGA
Login
User Identifier *
Password *
LOGIN
Forgot password?
Copyright © Developed by TNeGA 2023
Status: FETCHING
Profile
Start screening
Days remaining
Total screenings done
Logout

# புதுமைப்பெண் திட்டம்



Pudhumai Penn Scheme
The Government of TamilNadu has launched Moovalur Ramamirtham Ammaiyar Higher Education Assurance Scheme to enhance the enrolment ratio of girls from Government schools to Higher Education Institutions. Through this scheme, the financial assistance of Rs. 1000/month will be provided to the girls till their completion of UG degree/Diploma/ITI/any other recognized course. The incentive amount under this scheme will be disbursed directly into the student's Bank Account.
Login
Institution / College
Department
Social Welfare Department
Click here to know the details of appeal provision in case if your application has been rejected in the Pudhumai Penn Scheme.
Registrations are closed.




TACTV நிறுவனத்தின் துணை மேலாளர்கள் மற்றும் வினியோகஸ்தர்களின் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்களால் நடத்தப்பட்டது



27.05.2022 அன்று பார்த்நெட் திட்டத்தின் தொகுப்பு B-க்கான சேவை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.





27 நாடுகளில் 135 தொடர்பு மையங்கள் மூலம் கல்வித் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.




தமிழிணையம் - மின்னூலகம்



"தீராக் காதல் திருக்குறள்" – குறள் இனிது நாட்டிய நாடகம்



தமிழிணைய நூலகப் பயன்பாடு
4%
1%
1%
1%
4%
89%
இந்தியா
இலங்கை
அமெரிக்கா
மலேசியா
சிங்கப்பூர்
பிற




தமிழிணைய மின்நூலகத்தைப் பார்வையிட்டத் தனிப்பயனர்கள்
5,00,000
4,50,000
4,00,000
3,50,000
3,00,000
2,50,000
2,00,000
1,50,000
1,00,000
50,000
0
தனிப்பயனர்கள்
2,76,819
4,68,212
2021
2022
ஆண்டு




கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார்
150-வது ஆண்டு விழா




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 14.03.2023 அன்று சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் (ICTACT) நிறுவனத்தின் 50 வது BRIDGE மாநாட்டை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.